வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 11.11.2023 சனிக்கிழமை | இதழ் : 335 | பக்கங்கள் : 12

## இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை தடை

கொழும்பு, நவ. 11

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) இலங்கை கிரிக்கெட்டை தற்காலிகமாக தடை செய்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டில் அரசாங்கத்தின் தலையீடு அதிகமாக இருப்பதாக நம்புவதால் இவ்வாறு இலங்கை கிரிக்கெட் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

நேற்று கூடிய சர்வதேச கிரிக்கெட் பேரவை இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலங்கை, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் அங்கத்துவ நாடு என்ற ரீதியில் இலங்கை

11

## அரச நிறுவனங்களில் வெற்றிடம் நிரப்பப்படும்போது அந்த மாவட்டங்களை சேர்ந்தோருக்கு முன்னுரிமை!

கொழும்பு, நவ. 11

அரசாங்க நிறுவனங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற போது, அந்தந்த மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த அரசாங்க பிரதிநிதிகளுக்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்தில் உள்வாங்கப்பட்ட தென்னிலங்கையை சேர்ந்தவர்களை வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்

11



## சுண்ணக்கல் அகழ்வு எதிராக பூனகரியில் பெரும் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, நவ. 11

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு திட்டத்திற்கு எதிராக பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த திட்டத்திற்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தை ஆரம்பித்து நேற்று நூறாவது

11

# இந்திய இழுவைப் படகுகளை உடனடியாக கட்டுப்படுத்துக!

## யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம்

யாழ்ப்பாணம், நவம்பர் 11

**இந்திய இழுவைமடிப் படகுகளை கட்டுப்படுத்த கோரி யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனத்தினால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாண மாவட்ட செயலக நுழைவாயிலை முடக்கி நேற்று முற்பகல் 10 மணி முதல் கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய கடற்றொழிலாளர்களை

11



## தமிழ்ப் பாடசாலைகளுக்கு திங்கட்கிழமை விடுமுறை

கொழும்பு, நவ. 11

நாட்டில் உள்ள அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இவ்வாறு திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடுமுறைக்கு பதிலாக எதிர்வரும் 18ஆம் திகதி பாடசாலையில் கற்றல் செயற் பாடுகள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

11

## தமிழர் தாயகத்தை இணைத்து இந்து மக்களுக்கு தனி மாகாணம்

### சிவசேனை அமைப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை இணைத்து இந்து மக்களுக்கு தனி மாகாணத்தை உருவாக்க வேண்டும் என சிவசேனை அமைப்பு வேண்டுகொள் விடுத்துள்ளது.

இது தொடர்பில், மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையிலான சிவசேனை அமைப்பினர் நான்கு கோரிக்கைகளை இந்திய அரசாங்கத்திடம் மகஜர் ஊடாக வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் குறித்த மகஜர் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் ஊடாக

11

## சாதாரண தரப் பரீட்சை முடிவு இம்மாத இறுதியில்

கொழும்பு, நவ. 11

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கல்வி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

### பாகிஸ்தான் தூதர் கொலை முயற்சி வழக்கு:

## முன்னாள் எம்.பி கனகரத்தினத்தின் மகன் உட்பட மூன்று பேர் விடுதலை!

கொழும்பு, நவ. 11

இலங்கைக்கான முன்னாள் பாகிஸ்தான் தூதுவராக இருந்த வசீர் அலி மொஹமட் என்பவரை கொலை செய்ய முயன்றமை, அதற்கு சதி செய் தல் மற்றும் உதவி செய் தமை ஆகிய குற்றச்சாட் டின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் நீண்ட

11



## நடுவீதியில் உழுது, நெல் விதைத்து மூளாயில் நூதனமான போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். காரைநகர் மானிப்பாய் யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மூளாய் பகுதியில் வீதியை இடைமறித்து வீதியில் நெல் விதைத்து நூதனமான முறையில் பிரதேசவாசிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மானிப்பாய்-காரைநகர் வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார ஸ்திரத்தன்மை காரணமாக வீதி அபிவிருத்திகள் இடைநிறுத்தப்பபட்டிருந்தன. இந்நிலையில் அண்மையில் தற்காலிக புனரமைப்புகள் ஆரம்பிக்கப்

11

# இப்படியும் நடக்கிறது

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் 'டான்' தொலைக்காட்சி 'சொற்சமர்' நிகழ்ச்சி பற்றிய அண்மைக்கால விமர்சனங்கள் பற்றி எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, ஒரு நண்பர் ஒரு முகநூல் பதிவு ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்த முகநூல் பதிவுக்குரியவர் பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றேன்.

'இனம் ஒன்றின் குரல்' என்ற பெயருக்குள் மறைந்திருந்துகொண்டு, அவர் தன்னை ஒரு புத்திஜீவி போலக் காட்டிக் கொண்டிருப்பவர். அவர் எழுதிய பதிவு ஒன்றை அனுப்பியிருந்த நண்பர் ஒருவர், அவர் சொல்வதுபோல நிகழ்ச்சிகளை செய்யலாம்தானே என்று 'டான்' தொலைக்காட்சிக்கு ஆலோசனை சொல்லலாமே என்றும் எழுதியிருந்தார். அந்த நண்பரின் நோக்கம் நல்லதுதான்.

முதலில் அந்த இனத்தின் குரலை முதலில் கேட்போம்.

"'டான்' தொலைக்காட்சி 'சொற்சமர்' மாணவர்கள் பங்குபெறும் விவாத போட்டிகளில் விவாதிக்கப்பட்ட சில தலைப்புகள்:

இன்றைய இளைஞர்கள் தலையில் வைத்து கொண்டாடுவது 'தல' 'தளபதி'.

வேடபொருத்தம், உடல்மொழி என்பவற்றை வெளிப்படுத்துவதில் சிறந்தவர் 'கமல்ஹாசன்' 'சிவாஜி கணேசன்'.

சினிமா படவெற்றிக்கு காரணமாக அமைவது 'பாடல்கள்' 'கதைக்களம்'.

ஒரு திரைப்படத்தினுடைய நிலைத் திருப்பிற்குக் காரணம் திரைக்கதையா? பாடலா?.

மக்கள் மனங்களை ஆளும் இசையமைப்பாளர் 'ஏ.ஆர்.ரஹ்மான்' 'இளையராஜா'.

நடிகர் திலகத்தை இமயம் வரை கொண்டு செல்ல வைத்தது 'வேடப் பொருத்தம்' ' உடல்மொழி'.

தொலைக்காட்சி தொடர்கள் மக்களை 'சீர்படுத்துகின்றன' 'சீரழிகின்றன'.

பாடசலை மாணவர்கள் சீருடையுடன் கலந்து கொள்ளும் மேற்படி நிகழ்ச்சிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு லலீசன் நடுவராக கடமையாற்றுகின்றார்.

தொலைக்காட்சி வழி மாணவர்கள் பங்குபெறும் விவாத போட்டிகள் மாணவர்கள் மத்தியில் Critical thinking skills, Communication skills, Knowledge, Civic engagement போன்ற அடிப்படை விடயங்களில் மாணவர்களை முன்னோக்கி வழி நடத்தும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

சிங்கப்பூரின் 'The Arena' இங்கிலாந்தின் 'Debating Matters' அமெரிக்காவின் "Public Forum Debate' 'Lincoln - Douglas Debate' ருவாண்டாவின் 'Debate League' போன்ற பல மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சிகளின் வடிவமைப்பில், தலைப்புகள் தெரிவில் மேற்படி அடிப்படை விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் தலயா அல்லது தளபதியா விவாதிக்க பாடசாலை அதிபர்கள் மாணவர்களை எப்படி சீருடையுடன் அனுப்புகின்றார் கள் என தெரியவில்லை.

'டான்' தொலைக்காட்சி போன்ற நிறுவனங்களின் பின்னணி தெரிந்த எவரும் அவர்களிடம் சமூக பொறுப்பை எதிர்பார்க்கமாட்டார்கள்.

ஆனால் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கல்லூரி ஒன்றின் அதிபரின் சமூக பொறுப்பு, தான் சார்ந்து நிற்கும் ஆசிரியர் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

குறிப்பாக கோவிட் பெருந் தொற்றுக்கு பின்னரான மாற்றங்கள் காரணமாக தமிழ் மாணவர்கள் தங்களை தக்க வைக்க பல்வேறு நாட்டு மாணவர்களுடன் உயர்கல்வி மற்றும் தொழிற்சந்தையில் போட்டியிட வேண்டி இருக்கும்.

இதை எதிர்க்கொள்ளும் வகையில் மாணவர்களின் Knowledge, Skill and Confidence குறித்து ஆழமாக கவனம் செலுத்த வேண்டிய சூழல் உருவாகி வருக்கின்றது.

இந்த நேரத்தில் தல, தளபதி விவாதித்து கொண்டு இருந்தால் என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை."

இதுவே அந்த இனமொன்றின் குரலின் கவலை. அவர் சொல்ல வருவது நல்ல விடயங்கள்தான்.

இதுகுறித்து அந்த நிகழ்ச்சியின் தயாரிப்பாளரிடம் கேட்டேன். அவர் சொன்னார்,

"அவருக்கு 'டான்' ரிவியின் பின்னணி தெரிந்திருக்கின்றது. அதேபோல 'டான்' ரிவியின் முன்னணியும் தெரிந்திருக்கும். அதாவது பல லட்சம் மக்களை அது சென்றடைகின்றது. அதுதான் 'டான்' ரிவியின் முன்னணி. அதாவது முன்பக்கம். அதன் பின்னணி இருக்கட்டும் முன்னணியை பயன்படுத்தி அவர் சொல்வதுபோன்ற நிகழ்ச்சியை ஒரு வாரத்திற்கு அவரே செய்து காட்டினால் நல்லது என்கிறார் 'சொற்சமர்' நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்.

இந்த இனம் ஒன்றின் குரல் முதலில் தன்னை யார் என்று அடையாளப்படுத்தினால், அவரை தொடர்புகொண்டு, அவரிடம் நிகழ்ச்சி பற்றி ஆலோசனையாவது பெறலாம் என்ற அவரின் ஆதங்கமும் நியாயமானதுதான்.

இத்தனைக்கும், இப்படியெல்லாம் தலைப்புக்களில் மாணவர்கள் கதைத்தபோதெல்லாம் இவர் எங்கே இருந்தார் என்பது தெரியவில்லை. நான்கு வருடங்களாக அந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது. நிச்சயம் அவர் இப்போது தான் 'டான் 'ரிவியின் சமூக வலைத்தளங்களில் தேடி தலைப்புக்களை எடுத்திருக்கிறார் என்பது தெரிகின்றது. இது பற்றி முதலே தெரிந்திருந்தால் அவர் எழுதியிருப்பார் அல்லவா?.

தயாரிப்பாளரின் இந்த கருத்தைக் கேட்டபோது தான் ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் நண்பர் ஒருவர் ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அது, ஜி 20 அமைப்பின் தலைமையை இந்தியா பொறுப்பேற்றிருப்பது தொடர்பான கருத்தரங்கு. அதில் பேசுவதற்கு ஒரு கல்வியாளரை கேட்டபோது, அவர் கேட்டது: "வட் இஸ் ஜி ருவென்ரி?"

இவர்களை வைத்துத்தான் மாணவர்களுக்கு வகுப்பெடுக்கச் சொல்கிறாரோ?

அதற்காக மாணவர்களை சினிமா தொடர்பாகத்தான் பேசவைக்க வேண்டும் என்று நிச்சயமாக சொல்லப் போவதில்லை.

'சொன்னால் மட்டும் போதுமானதல்ல, அதனைச் செய்யவும் முன்வர வேண்டும். 'டான்' குழுமத்திலிருந்து ஒரு தனிச் சனலாக 'கல்வி ரிவி' ஒரு தசாப்தமாக ஒளிபரப்பாகின்றது. சில பாடசாலைகளில் சில பாடங்களுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. கல்வி ரிவியியில் ஆசிரியர்கள் பாடங்களை நடத்தினால், மாணவர்கள் அதனைப் பார்த்து பயன்பெறுவார்கள் என்று சிந்தித்து இதுவரை தாமாக முன்வந்த ஆசிரியர்கள் எத்தனை பேர்?" என்று கேட்கிறார் 'டான்' ரிவியின் அந்த நிகழ்ச்சி தயாரிப்பாளர்.

**-ஊர்க்குருவி.**

# வீடு உடைத்து பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற நபரது வீட்டில் இருந்த தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பளை பகுதியிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று வீட்டின் உரிமையாளர் வீட்டை பூட்டிவிட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அவர் வீட்டுக்கு திரும்பிய வேளை வீட்டின் கதவு திறந்திருந்ததோடு, வீட்டில் இருந்த தொலைக்காட்சி பெட்டி, மின் மோட்டார் உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்கள் திருட்டு போயுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீனிக்கு விதித்த கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு இறக்குமதியாளர் கோரிக்கை

கொழும்பு, நவ. 11

சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு சீனி இறக்குமதியாளர்கள், வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, அதிகபட்ச சில்லறை விலையில் சீனியை இறக்குமதி செய்வதால் 40ரூபாய் நட்டம் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நுகர்வோர் விவகார அதிகார சபையானது சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையாக 275 ரூபாயை நிர்ணயித்துள்ளது.

அண்மையில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சீனி இறக்குமதியாளர்கள் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

டொலர் அதிகரிப்பு மற்றும் ஒரு கிலோ கிராம் சீனிக்கு 40 ரூபா நட்டம் ஏற்படுவதால் எதிர்காலத்தில் சீனி இறக்குமதியை இரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என இறக்குமதியாளர்கள் இந்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறு நடந்தால், கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டின் போது நாட்டில் சீனி தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் எச்சரித்துள்ளனர். (அ)

# 11,757 ஏக்கர் நெற்செய்கை அழிவு

கொழும்பு, நவ. 11

கடும் மழை காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த 11,757 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏறக்குறைய ஒன்றரை மாதங்களாக பெய்து வரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் பயிரிடப்பட்ட நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மழைக்கு முன் வறண்ட வானிலையால் 64,088 ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன.

வறட்சியினால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபைக்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை வழங்கியுள்ளார்.

உரிய நட்டஈட்டை இந்த வருடமே வழங்க வேண்டும் எனவும், அரசாங்கத்திடம் இருந்து பணத்தை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டால் பயிர் சேதத்திற்கான இழப்பீட்டை சபைக்கு சொந்தமான நிதியில் வழங்குமாறும் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (அ)

### அமைச்சின் செயலாளர் இடமாற்றம்

# சீன உரக்கப்பல் ஒப்பந்தம் தொடர்பான விசாரணை குழு நியமிப்பதில் தாமதம்!

கொழும்பு, நவ. 11

நிராகரிக்கப்பட்ட சீன உரக்கப்பல் ஒப்பந்தம் தொடர்பில் இலங்கைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவொன்றை நியமிக்கும் நடவடிக்கை விவசாய அமைச்சின் செயலாளரின் இடமாற்றம் காரணமாக தாமதமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசாரணை நடத்தும் வகையில் உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் நியமிக்கப்படும் இந்தக் குழுவிற்கு பொருத்தமான நபரை நீதியமைச்சு பரிந்துரைத்துள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் குணதாச சமரசிங்க இடமாற்றம் செய்யப்பட்டமையினால் குறித்த குழுவின் நியமனம் தாமதமாகியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரத்திற்குள் குழு நியமிக்கப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

சீன உரம் தொடர்பான கொடுக்கல்வாங்கல் நட வடிக்கைகளில் சில மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு உயர்மட்ட குழுவொன்று நியமிக்கப்படும் என விவசாய அமைச்சர் கடந்த ஜூலை மாதம் தெரிவித்திருந்தார்.

இந்தக் குழுவில் நியமிக்கப்படவுள்ள ஏனைய உறுப்பினர்கள் தொடர்பில் யோசனையொன்று முன்வைக்கப்பட்டதுடன், நீதியமைச்சினால் நீதியரசர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் குழு நியமிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, அமைச்சுப் பதவிகள் மற்றும் அமைச்சுக்களின் செயற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அமைச்சின் செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக குழு நியமிக்கும் பணிகள் தாமதமாகிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
11.12.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெளியாரை கையாளும் கூட்டு உடன்பாடு தேவை

வடக்கு, கிழக்கில் சீனாவின் முதலீடுகள் எதிர்க்கப்பட வேண்டும் - இவ்வாறு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார். எமது பகுதிகளுக்குள் சீனா உள்நுழைகின்றபோது, அது இந்தியாவுக்கும் சீனாவுக்குமான முரண்பாடாக மாற்றமுறும். அது எங்களை பாதிக்கும். அவ்வாறான நிலைமையை நாம் அனுமதிக்கக் கூடாது, என்றும் செல்வம் கூறுகின்றார். சீனாவின் முதலீடுகளை சிலர் பூகோள அரசியலுடன் தொடர்புபடுத்தப் பார்க்கின்றனர். பூகோள அரசியலுக்கும் இதற்கும் ஒரு தொடர்புமில்லை - இது, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்து.

பூகோள அரசியல் முரண்பாடுகள் என்பது நிரந்தரமான ஒன்று. அதற்கு பல பரிமாணங்கள் உண்டு, அரசியல், பொருளாதார, இராணுவம் என - அது மிகவும் பரந்தது. எனவே, சீனா, எவ்வாறான நோக்கத்தில் உள்நுழைய முயற்சிக்கின்றது என்பதை சீனா மட்டுமே அறியும். எனவே சீனாவின் நகர்வுகளுக்கு பின்னால் பூகோள நலன்கள் இல்லையென்று கடற்றொழில் அமைச்சர் நற்சான்றிதழ் வழங்க முடியாது.

சர்வதேச உறவுகளில் ஒரு நிலைப்பாடுண்டு. அதாவது, பலம்பொருந்திய சக்திகளின் நகர்வுகளின் இலக்கை எவரும் - இப்படித்தான் இருக்குமென்று, அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. எதுவும் நடக்க கூடும் - என்னுமடிப்படையில்தான் விடயங்களை கணிக்க முடியும். சர்வதேச கட்டமைப்பில் இதனை பின்வருமாறு அழைப்பர். அதாவது, ஒருவர் மற்றவரின் உள் நோக்கத்தை அறிந்திருக்கமாட்டார். இந்த அடிப்படையில்தான் அனைத்து முக்கிய முடிவுகளும் எடுக்கப்படுகின்றன. உதாரணமாக சீனா பத்து வருடங்களுக்கு பின்னர் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை இந்தியாவால் அறியமுடியாது - அதேபோன்று, இந்தியா எவ்வாறு சிந்திக்கின்றது என்பதை சீனாவால் அறிய முடியாது. எதுவும் நடக்கலாம் என்னும் அடிப்படையில்தான் பலம்பொருந்திய நாடுகள், அவர்களின் பூகோள நலன்களுக்கான வியூகங்களை வகுப்பர்.

இந்த பின்புலத்தில் நோக்கினால் ஆசியாவில் ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சியடைய முயற்சிக்கும், சீனா இலங்கையையும் அதற்கான தளமாக பயன்படுத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால் செல்வம் அடைக்கலநாதனின் கருத்தை நிராகரிக்க முடியாது. அது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் இவ்வாறான கருத்துக்களை ஆங்காங்கே கூறிவிட்டு, அமைதியாக கலைந்து செல்வது, சரியானதொரு அணுகுமுறையல்ல. வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்டிருக்கும், தமிழ் தேசியவாத கட்சிகள் மத்தியில் இது தொடர்பில் ஒரு கூட்டு இணக்கப்பாடு அவசியம். அதாவது, சீனாவின் விடயங்களில் எவ்வாறான கொள்கை நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் அல்லது சீனாவுக்கு எவ்வாறான விடயங்களை வலியுறுத்த வேண்டும் - இது தொடர்பில் கூட்டு இணக்கப்பாடு அவசியம்.

யுத்தத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் என்பது, அடிப்படையிலேயே வெளியாரின் அழுத்தங்களுக்காக காத்திருக்கும் அரசியல்தான். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முறையிடுவது தொடக்கம், இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் வரையிலான அனைத்து செயல்பாடுகளுமே, வெளியாரிடம் முறையிடுவதும், அதன் மூலமான அழுத்தங்களை எதிர்பார்ப்பதும்தான்.

ஆனால் இந்த வெளியாரில் சீனா இல்லை. தமிழர் விவகாரத்தில் சீனா ஓர் அந்நியன். இந்தியா, அமெரிக்கா போன்ற நட்பு சக்தியல்ல. ஏனெனில், தமிழ் மக்களின் விவகாரத்தில் தலையிடும் நிலைப்பாடு தங்களிடம் இல்லையென்று சீனா வெளிப்படையாகவே கூறிவிட்டது. இந்த நிலையில் சீனாவை நோக்கி தமிழர்கள் செல்ல முடியாது. எனவே தமிழ் மக்களது அரசியல் நலன்களை முன்னிறுத்தி, யாருடன் நிற்க வேண்டும் - யாருடன் நிற்கக் கூடாது, என்பதில் தமிழ் தேசிய கட்சிகள் கூட்டான தீர்மானமொன்றுக்கு வரவேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."

**- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)**



# தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கும் செயல்பாடுகளுக்கு ஆதரவு

**யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்**

*யாழ்ப்பாணம், நவ. 11*

"தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு" என யாழ். பல்கலைகழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ். பல்கலைகழக ஊழியர் சங்கம் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து, கடந்த ஞாயிறுக்கிழமை மட்டக்களப்பு, மயிலத்தமடு - மாதவனைப் பகுதி மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிவரும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டம் எவ்வித குழப்பங்களும் இன்றி யாருக்கும் இடையூறுகளுமின்றி நடைபெற்று நிறைவடைந்த பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவர்களை இடைமறித்து அவர்களில் ஆறு மாணவர்களை கைது செய்தனர்.

இது ஒரு திட்டமிட்ட ஜனநாயக விரோதச் செயல்பாடு ஆகும்.

இச் செயற்பாடு ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர்களினதும் ஏனையவர்களினதும் செயற்பாடுகளை அச்சுறுத்தும், அரசபடைகள் மூலம் அடக்கும் நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னெடுக்கக்கூடாது என கோருவதோடு, கைதுசெய்யப்பட்டு வழக்குப்பதியப்பட்ட மாணவர்கள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம்.

அதேவேளை, பல்கலைக்கழக மாணவர்களாலும் ஏனையோராலும் தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு என்பதோடு அச்செயற்பாடுகளில் அவர்களுடன் இணைந்து நிற்போம் எனவும் தெரிவித்துக் கொள்கிறோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# கிரிக்கெட் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் சிறப்புரிமையை மீறியிருக்கிறார் சபாநாயகர்

**சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு**

*கொழும்பு, நவ. 11*

குண்டர்கள், போதைப்பொருள் கும்பல்கள், ஒழுக்க கேடான நபர்களுக்கு சொந்தமான ஒன்றல்ல. அது 220 இலட்சம் மக்களுக்கும் சொந்தமானது. கிரிக்கெட்டில் இருந்து ஊழல் கும்பலை விரட்டியடிக்கும் வாக்கெடுப்பில் சபாநாயகர், தனது பெயரில் பிரேரணைக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கும் உரிமையை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை. சபாநாயகர் மீது சில மறைமுக சக்திகள் அழுத்தங்களை பிரயோகித்ததே இதற்குக் காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது தவறான செயல். சபாநாயகரே உறுப்பினர்களின் உரிமைகளை மீறியுள்ளார். இதற்காக வருந்துவதாகவும், பெயர்கள் குறிப்பிட்டு வாக்கெடுப்பு நடந்திருந்தால் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு பெயர்களை அனுப்பியிருக்கலாம்.


சபாநாயகரின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்ற முறைமையினுள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். கிரிக்கெட் சபை இப்போதேனும் வெளியேற வேண்டும். நாட்டில் செயற்படும் சர்வாதிகார அரசியல் கலாசாரத்தின் மற்று மொரு எடுத்துக்காட்டாக சபாநாயகரின் நடத்தை மற்றும் செயற்பாடுகளை குறிப் பிட முடியும்.

இந்த பிரேரணையை முன்வைக்கும் போது, பாராளுமன்றத்தின் முன்னணி இருக்கை உறுப்பினர்களுக்கு தொலைபேசி அழைப்புகள் கூட வந்தன.

அவர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் முன்வரிசை உறுப்பினர்கள் கூட இந்த பிரேரணைக்கு உடன்பட்டனர். தான் 225 பேருக்காக பேசினாலும் குறிப்பிட்ட எம்.பி.க்கள் இந்த வாக்கெடுப் பில் பங்கேற்காதது குறித்து மக்களே முடிவு எடுப்பார்கள்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு சொந்தமான கோடிக்கணக்கான நிதியை சரியான முறையில் பயன்படுத்தி திறமைசாலியான வீரர்களுக்கு கீழ் மட்டத்திலிருந்து முன்னேற வழிவகை செய்யவேண்டும். கிரிக்கெட் குறித்த அறிவு உள்ளவர்களுக்கு இதன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**நவம்பர் - 11 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 25**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : அதிதி**




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வாகனங்ளை சரி செய்வீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள்இன்று முடியும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள் உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். சக ஊழியர்களை பகைத்து கொள்ளாதீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உயரதிகாரிகள்உங்களைமதித்துப்பேசுவார்கள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவுக் கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். அலுவலகத்தில் நிம்மதி உண்டு. உற்சாகமான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள்.

**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

# நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து காரில் அதிமுக கொடியின்றி பயணித்த ஓ.பி.எஸ்

சென்னை, நவ. 11

சென்னை உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தனது காரில் அதிமுக கொடியை பயன்படுத்தாமல் பயணம் செய்தார்.

கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழு கூட்டத்தில், ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் உள்ளிட்ட 4 பேரை கட்சியில் இருந்து நீக்கியும், பழனிசாமியை கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதை எதிர்த்து பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு உயர் நீதிமன்றம் தடை விதிக்க மறுத்தது.

இந்நிலையில், அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், போன்றவற்றை பன்னீர்செல்வம் தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கில், பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும் பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்து பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை எதுவும் விதிக்கவில்லை. எனவே, அதிமுக பெயர், கொடி, சின்னம் போன்றவற்றை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள பன்னீர்செல்வம் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்த நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இதை எதிர்த்து பன்னீர்செல்வம் மேல்முறையீடு செய்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வாரம் சொந்த விடயமாக சிங்கப்பூர் சென்ற பன்னீர்செல்வம், நேற்று முன் தினம் விமானத்தில் சென்னை திரும்பினார். அப்போது நீதிமன்ற உத்தரவை ஏற்று விமான நிலையத்தில் இருந்து சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள இல்லத்துக்கு காரில் வந்த பன்னீர்செல்வம், தனது காரில் இருந்த அதிமுக கொடியை அகற்றி இருந்தார். இது, அவரது தொண்டர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# தமிழகத்தில் 2026 தேர்தலில் கொக்குபோல காத்திருந்து பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்கும்!

## அண்ணாமலை உறுதி

சென்னை, நவ. 11

2026 சட்டப்பேரவை தேர்தலில் கொக்கு போல காத்திருந்து தமிழகத்தில் பாஜக ஆட்சியைப் பிடிக்கும் என மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தி.நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

என் மண் என் மக்கள் யாத்திரை 103 தொகுதிகளை கடந்திருக்கிறது. இன்னும் 131 தொகுதிகளில் நடைபயணம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. எனவே, ஜனவரி இறுதி வாரத்துக்குள் யாத்திரையை முடித்துவிட்டு, பாராளுமன்ற தேர்தலுக்கு தயாராக திட்டமிட்டு இருக்கிறோம். இதுவரை நடைபயணத்தில் 3 முக்கிய விஷயங்களை கவனித்தோம். தென் தமிழகம் தொடங்கி, பெரம்பலூர், கிருஷ்ணகிரி வரை நடக்கும் சமூக அநீதி. விவசாயத்தை சார்ந்த பிரச்சினைகள். நிர்வாகத்தில் அடிமட்ட அளவில் இருந்து பரவி கிடக்கும் லஞ்சம், ஊழல்.

2024 பாராளுமன்ற தேர்தலில் இந்த மூன்றும்தான், யார் வெற்றி பெற போகிறார்கள் என்பதை தீர்மானிக்கும். கடவுள் இல்லை, கடவுளை கற்பிப்பவன் முட்டாள் என்ற வாசகங்கள் கோயிலுக்கு வெளியே வைக்கப்படுவதை தமிழக மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. பெரியார் சமூக அநீதிக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறார். ஆனால், சிறிரங்கம் கோயில் அருகே உள்ள பெரியார் சிலையின் கீழ் எழுதியிருக்கும் வாசகத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அந்த கருத்தை தேவாலயத்தின் முன்போ, மசூதி முன்போ வைக்க ஒத்துக்கொள்வார்களா?

பெரியாரின் கருத்துகளை கோயிலுக்கு வெளியே வைக்க வேண்டும் என்பதற்கு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்தால், திமுக, கம்யூனிஸ்ட், காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு எதிராக பெரியார் சொன்ன கருத்துகளை அவர்களது கட்சி அலுவலகத்துக்கு வெளியே வைக்கவும் ஆதரவு கொடுப்பார்களா? கோயிலுக்கு வெளியே பெரியாரின் சிலை, அந்த வாசகங்கள் அகற்றப்பட வேண்டும். 2026 இல் தமிழகத்தில் பாஜக ஆட்சி அமைக்க மக்கள் வாய்ப்பு கொடுத்தால் பெரியாரின் சிலை எங்கு இருக்க வேண்டுமோ, அங்கு மாற்றப்படும். அந்த சிலைக்கு உரிய மரியாதை பாஜக கொடுக்கும்-என்றார். (அ)

# அண்ணாமலை தன்னை திருத்திக்கொள்ளவேண்டும்

## பெரியார் சிலை குறித்து பொன்முடி விளக்கம்

சென்னை, நவ. 11

பெரியாரின் சிலை வைக்கும் நோக்கமே பகுத்தறிவு, அடித்தளத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கமேயாகும். ஆகவே, அண்ணாமலை தன்னை திருத்திக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் பொன்முடி பேசினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை ஐபிஎஸ் அதிகாரியானதற்கு காரணமே பெரியார்தான். தமிழகத்தில் ஆணும் பெண்ணும் சமம், அனைவரும் படிப்பதற்கு பெரியார்தான் காரணம். வடமாநிலத்தவரும் பெரியாரை ஏற்றுக்கொண்டுள்ளார். தனக்கு ஏதாவது வாய்ப்பு கிடைக்குமா என்ற நப்பாசையில் அவர் பேசிவருகிறார். பெரியார், அண்ணா, கலைஞர், காமராஜர் போன்றவர்கள் அடிதட்டு மக்களுக்காக, பெண்ணுரிமைக்காக எவ்வளவு பாடுபட்டார்கள் என்பது அவருக்கே நன்கு தெரியும். பெரியாரின் சிலை வைக்கும் நோக்கமே பகுத்தறிவு, அடித்தளத்து மக்களுக்கும் சென்றடையவேண்டும் என்ற நோக்கமேயாகும். ஆகவே, அண்ணாமலை தன்னை திருத்திக்கொள்ள வேண்டும் என உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வித் துறை செயலாளர் பெயர்கூட அழைப்பிதழில் இடம்பெறவில்லை. அவருக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. புதுச்சேரி முன்னாள் ஆளுநர் கிரண்பேடி பட்டமளிப்பு விழாவில் ஆளுநரோ, துணை வேந்தரோ பேசவில்லை என்று கூறியுள்ளார். உங்களுடன் உள்ள ஐபிஎஸ் அதிகாரியே பேசியுள்ளார். முன்பெல்லாம் எங்களுக்கு முறையாக அழைப்பு அனுப்பப்பட்டு, பேச அனுமதிக்கப்பட்டது. இப்போது அனுமதிக்கப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் ஆளுநர் தான் மட்டும்தான் பேசவேண்டும் என்ற எண்ணம்தான்.

நாம் பெரியார், திராவிட சிந்தனைகளை மாணவர்களுக்கு எடுத்து சொல்ல வாய்ப்பு அளித்து 5 நிமிடம் அனுமதி அளிக்கவேண்டும். ஒவ்வொரு பட்டமளிப்பு விழாவிலும் எங்களையும், உயர் கல்விச் செயலாளரையும் அழைத்து பேச அனுமதிக்கவேண்டும். மேடையில் அவருக்கு இருக்கைகூட ஒதுக்கப்படவில்லை. இனி பட்டமளிப்பு விழாவை துணை வேந்தரான நீங்கள் நடத்துங்கள் என்று சொல்லும் அளவுக்கு இனி ஆளுநர் நடந்துகொள்ள மாட்டார் என நம்புகிறேன்- என்றார்.

(அ)

# அமைச்சரவையில் இருந்து நீக்கப்படுவாரா ரொஷான்?

## அமைச்சரவை கூட்டு பொறுப்பை மீறினாராம்

கொழும்பு, நவ. 11

**அமைச்சரவையில் இருந்து ரொஷான் ரணசிங்கவை நீக்குமாறு அமைச்சர்கள் சிலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அமைச்சரவை கூட்டு பொறுப்பை மீறும் வகையிலும், மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலையை உருவாக்கும் நோக்கிலும் அவர் செயற்பட்டுவருவதாலும், அவரை தொடர்ந்து வைத்திருந்தால் அரசுக்கு நெருக்கடி ஏற்படும் எனவும் குறித்த அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் ரொஷான் ரணசிங்கவை அமைச்சரவையில் இருந்து நீக்கினால் அது அவரை அரசியல் ரீதியில் புகழின் உச்சியில் அமர வைக்கும் எனவும், எதிரணிகள் அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடக்கூடும் எனவும் மேலும் சில அமைச்சர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், இது தொடர்பில் ஜனாதிபதி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என தெரியவருகின்றது. (அ)

# போராட்டம் நிறைவடைந்தது தபால் சேவைகள் வழமைக்கு

கொழும்பு, நவ. 11

தபால் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் 48 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

அதனையடுத்து, தபால் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

அத்தோடு, இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக பணிகள் இடம்பெறாமையால் சுமார் 10 இலட்சம் தபால்களை உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலைய கட்டடங்களை சுற்றுலா நோக்கங்களுக்கு விற்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே தபால் ஊழியர்கள் கடந்த 48 மணிநேர வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உணவு பணவீக்கம் மேலும் குறையும்!

கொழும்பு, நவ. 11

உணவுப் பணவீக்கம் அடுத்த ஆண்டில் மேலும் குறைவடையும் சாத்தியம் உள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களின் விலையை எந்தளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்பதை புரிந்து கொள்வதற்காக உணவு உற்பத்தி தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த சில நாட்களாக நாட்டின் உணவு விலை மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக, பிரதான வருமான வழியான வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அத்துடன் நாட்டில் இடம்பெறும் உள்நாட்டு உற்பத்திகள் நுகர்வோரைச் சென்றடையும் அளவுகள் தொடர்பில் தற்போது ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார். (அ)

# இலங்கையின் நிதி மேம்படுத்தல் திட்டத்துக்கு உலக வங்கி 150 மில்லியன் டொலர் நிதியுதவி!

கொழும்பு, நவ. 11

இலங்கையின் நிதியியல் துறை மேம்படுத்தல் செயற்திட்டத்துக்கு 150 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்க உலக வங்கியின் நிர்வாக இயக்குநர்கள் குழு நேற்று வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து உலக வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:

தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியானது நாட்டின் நிதியியல் துறைக்கு ஆதரவளிக்கக்கூடிய வலுவான பாதுகாப்புத் திட்டங்களின் அவசியத்தை உணர்த்தியிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம், வணிகங்கள், சிறிய முயற்சியாளர்கள், தனிநபர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் ஸ்திரமானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான வங்கித்துறை இன்றியமையாததாகும். அதேபோன்று காப்புறுதிவைப்புத் திட்டத்தை வலுப்படுத்துவதானது பெண்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வசிப்போர் உள்ளடங்கலாக சிறிய தொகை வைப்பாளர்களின் சேமிப்பைப் பாதுகாப்பதற்கு உதவும். அதுமாத்திரமன்றி நாட்டின் நிதியியல் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் பங்களிப்புச்செய்யும் என்பதுடன், அது நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு மிகவும் அவசியமாகும்.

அதேபோன்று நுண்பாகக் கடன்நெருக்கடியின்போது நிதியியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு நிதியியல் துறை பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அத்தோடு விரிவுபடுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் சீரான செயற்திட்டத்துடன்கூடிய புதுப்பிக்கப்பட்ட காப்புறுதி வைப்புத்திட்டமானது நிதியி யல் துறை மீதான மக்களின் நம்பிக்கையையும், மக்களின் சேமிப்பையும் பாதுகாப்பதற்கு வழிவகுக்கும்-என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# யாழில் மூதாட்டி சடலமாக மீட்பு: 2 பெண்கள் உட்பட மூவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 11

அல்வாய் பகுதியில் கடந்த மாதம் மூதாட்டி ஒருவரை படுகொலை செய்த குற்றச்சாட்டில் இரு பெண்கள் உள்ளிட்ட 3 பேர் நெல்லியடி பொலிஸாரினால் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அல்வாய் பகுதியில் கடந்த ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி வீடொன்றில் இருந்து மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அல்வாய் கிழக்கை சேர்ந்த பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது 84) என்ற மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டதை தொடர்ந்து, அவரது உடற்கூற்று பரிசோதனையின்போது சந்தேகங்கள் இருந்தமையால் அவரது உடற்பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதனையடுத்து, கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மூதாட்டி படுகொலை செய்யப்பட்டே உயிரிழந்துள்ளார் என்பது கண்டறியப்பட்டது.

அதன் பின்னர், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் 32 மற்றும் 28 வயதுடைய தம்பதியினரையும், மூதாட்டியின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்துவந்த 19 வயது யுவதியையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மூதாட்டியின் காணிக்குள் இரண்டு வீடுகள் காணப்படுவதாகவும், ஒரு வீட்டை தம்பதியினருக்கு வாடகைக்கு வழங்கிவிட்டு மற்றைய வீட்டில் மூதாட்டி வசித்து வந்ததுடன், மூதாட்டியை பராமரிப்பதற்காக 19 வயது யுவதி ஒருவர் அந்த வீட்டில் பணிப்பெண்ணாக தங்கியிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதான மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பேராதனை பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

## 3 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, நவ. 11

பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட மோதலில் குறித்த பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீட மாணவர்கள் 3 பேர் காயமடைந்து பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர்கள் மற்றும் பல் மருத்துவ பீட மாணவர்கள் ஆகிய இரு மாணவ குழுக்களிடையிலேயே மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)




# பலஸ்தீன மோதலில் கொல்லப்பட்ட சிறுவர்களுக்கு கொழும்பில் அஞ்சலி

கொழும்பு, நவ. 11

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலையடுத்து பாலஸ்தீனில் கொல்லப்பட்ட 4000 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை நினைவுகூரும் நிகழ்வு கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்தில் இடம்பெற்றது. (அ)

# இது மொட்டு கட்சியின் ஆட்சி அநீதி ஏற்பட இடமளியோம்!

## மகிந்த ராஜபக்ஷ பெருமிதம்

கொழும்பு, நவ. 11

**“இது மொட்டுக் கட்சியின் ஆட்சி. இந்த ஆட்சியில் எவருக்கும் அநீதி ஏற்பட இடமளிக்கமாட்டோம்.” என்று பொது ஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போது இதனைக் கூறிய அவர், மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவற்றை தீர விசாரிக்க வேண்டும். அதன்பின்னர்தான் ஒரு முடிவுக்கு வர முடியும். அதைவிடுத்து கண்ணை மூடிக்கொண்டு தீர்மானங்களை எடுக்க முடியாது.

நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழும் நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களின் வயிற்றில் அடிக்கக்கூடாது.

கடந்த வருட ஆரம்பத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் என்பது உண்மை. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிரணியினர் அன்று குளிர்காய முற்பட்டனர். ஆனால், அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. அரசின் உயர் பதவிகளில் மாற்றம் ஏற்பட்டாலும் மொட்டுக் கட்சியின் ஆட்சி தொடர்கின்றது. நாட்டின் பொருளாதாரம் தற்போது வழமைக்குத் திரும்பி வருகின்றது-என்றார். (அ)

# ஆனையிறவில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, நவ. 11

கஞ்சாவுடன் பயணித்த இளைஞர் ஒருவரை ஆனையிறவு வீதி சோதனை நிலையத்தில் வைத்து இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

கிளிநொச்சி-ஆனையிறவு வீதி சோதனைச்சாவடியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடுத்துறை பகுதியில் இருந்து கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் செல்வதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய ஆனையிறவு பகுதியில் வைத்து சோதனையிட்ட போது 390 கிராம் நிறையுடைய கஞ்சாவை வைத்திருந்த வவுனியாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# முட்டை விலை உயராது

கொழும்பு, நவ. 11

நாட்டில் பண்டிகைக் காலத்தில் முட்டை விலையில் அதிகரிப்பு ஏற்படாது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், கோழி இறைச்சியின் விலையை அதிகரிக்க வர்த்தகர்கள் முயற்சித்தால் அதற்கு கட்டுப்பாட்டு விலையை விதிக்கவுள்ளதாகவும் கூறினார். (அ)

# அமெரிக்க பசுபிக் சிறப்பு தளபதி பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு



கொழும்பு, நவ. 11

இலங்கை வந்துள்ள அமெரிக்க பசுபிக் சிறப்பு நடவடிக்கைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜெரோமி பி வில்லியம்ஸ் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கோட்டை ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரியை வரவேற்ற பாதுகாப்புச் செயலாளர் அவருடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்கிடையில் உள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது மற்றும் பயிற்சி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ரியர் அட்மிரல் வில்லியம்ஸ் தற்போதைய நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர், இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் கருத்து; இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கரிசனை

கொழும்பு, நவ. 11

இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பான இடைக்காலக் குழு விவகாரத்தில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்பட்ட தீர்ப்பை விமர்சித்து விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி பாராளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது நீதிமன்றக் கட்டமைப்பின் சுதந்திரத்துக்கு நேரடி அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:

இலங்கை கிரிக்கெட் சபை குறித்த இடைக்காலக் குழு நியமனத்துடன் தொடர்புடைய வழக்கு பற்றி புதன்கிழமை அமைச்சர் ஒருவரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியின் நடவடிக்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் என்பன எம்மை மிகுந்த விசனத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றன.

நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை என்பது சட்ட ஆட்சியின் அடிப்படைக் கோட்பாடாகத் திகழ்கின்றது. எனவே நீதிமன்ற சுயாதீனத்தன்மையில் ஏற்படுத்தப்படும் எந்தவொரு தலையீடும் மிகப்பாரதூரமானது என்பதுடன், அது நீதிமன்றத்தின்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் மலினப்படுத்தும்.

எனவே அனைத்துத்தரப்பினரும் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள வரையறைகளின் பிரகாரம் செயற்படவேண்டும். எவ்வகையிலேனும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்துகின்றோம்-என்றுள்ளது. (அ)

### புலமைப்பரிசில் பரீட்சைக்கு அனுமதிக்காமை;

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மாணவனின் பெற்றோர் முறைப்பாடு!

கொழும்பு, நவ. 11

அடுத்த வருட புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த முல்லைத்தீவு கோம்பாவில் பாடசாலை மாணவர் ஒருவரை பரீட்சை எழுத அனுமதிக்க முடியாது என பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மாணவரின் பெற்றோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பிய நிலையில் தமது மகனுக்கு இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முல்லைத்தீவு அலுவலகத்தில் இந்தப் பெற்றோர் சமர்ப்பித்த முறைப்பாட்டில் தெரிவிக்கின்றனர்.

இதனால் 42 நாட்களாக தமது மகன் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மருத்துவ அறிக்கைகள் பாடசாலையில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நிலைமை இருந்தும், தன் மகனை பரீட்சை எழுத அனுமதிக்க முடியாது என பாடசாலை நிர்வாகம் முடிவு செய்தது.

இந்த மாணவரின் மூத்த சகோதரி இரண்டு வருடங்களுக்கு முன்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 167 புள்ளிகளைப் பெற்றிருந்தார். இம்முறை பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ள மாணவர் இதுவரை பாடசாலை நடத்திய பரீட்சை பயிற்சி வினாத்தாள்களில் 70 வீதத்துக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இது மிகவும் அநியாயமான முடிவாகும் எனவும், தமது மகனை அடுத்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சை எழுத அனுமதிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட வேண்டும் எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதாகவும், மாணவருக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால், தலையிட்டு தீர்வு வழங்குவதாகவும் தெரிவித்தனர். (அ)

# மின்கம்பத்துடன் வான் மோதி 11 பேர் காயம்!

கொழும்பு, நவ. 11

ஹொரவப்பொத்தானை-கெப்பிற்றிக்கொலாவ பிரதான வீதியில் கிவுளக்கடை பகுதியில் வானொன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து வவுனியாவுக்கு நேர்முகத் தேர்வு ஒன்றுக்காகச் சென்றவர்களே இவ்விபத்தில் சிக்கியுள்ளனர்.

குறித்த வாகனம் வீதியோரம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதோடு, விபத்தில் காயமடைந்தவர்கள் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை ஹொரவப்பொததானை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சட்டமா அதிபருக்கு நீதிமன்றத்தில் நியாயமான விளக்கமளிக்க நேரும்

## ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, நவ. 11

**பாராளுமன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சிறிலங்கா கிரிக்கெட்டின் நிர்வாகத்தை பதவி நீக்கும் தீர்மானம் தொடர்பில், சட்டமா அதிபருக்கு நீதிமன்றில் நியாயமான விளக்கமளிக்க நேரிடும் என ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விளைவு என்ன என்பது தொடர்பில் வினவியபோதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“ஊழல் மிக்க சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளை நீக்குதல்” எனும் தலைப்பில் ஆளும் மற்றும் எதிர்கட்சி என்பன இணைந்து குறித்த பிரேரணையை முன்வைத்திருந்தன.

இந்த நிலையில், அந்த பிரேரணைக்கு ஆளும் மற்றும் எதிர்கட்சியின் ஆதரவு கிடைக்கபெற்றிருந்த நிலையில், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபையில் சபாநாயகர் அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரேரணை நிறைவேற்றும் வேளையில் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இந்தநிலையில், குறித்த விடயம் தொடர்பில், கருத்துரைத்த ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி சில்வா, பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில், நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் விளக்கமளிக்க வேண்டும்.

பாராளுமன்றம், நாட்டு மக்களின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் பிரதிநிதிகளை கொண்டிருப்பதால், இந்த விடயத்தினை நீதிமன்றுக்கு அறியப்படுத்தவேண்டும்.

அதனை ஆராய்ந்து நீதிமன்றம் தீர்மானம் எடுக்கும்-என்றார்.

# சீனி களஞ்சியசாலைகளை கண்காணிக்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 1

கையிருப்பு நிறைவடையும் வரையில், அனைத்து சீனி களஞ்சியசாலைகளையும் கண்காணிப்பதற்கான பணிகளில், நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஒரு கிலோ சீனியின் தற்போதைய கட்டுப்பாட்டு விலையான 275 ரூபாவிற்கு அதிகமாக சீனியை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எந்தவொரு பொருளுக்கும் நிர்ணய விலை அறிவிக்கப்பட்டால் அந்த பொருளுக்கான தட்டுப்பாடு சந்தையில் நிலவும்.

எனினும், கடந்த சில தினங்களாக, சந்தைக்கு களஞ்சியசாலைகளில் இருந்து குறைந்தளவிலேயே சீனி விடுவிக்கப்படுகிறது.

எனவே, கையிருப்பு நிறைவடையும் வரையில் நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் களஞ்சியசாலைகளில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டாயமாக சந்தைக்கு வினியோகிக்கப்படும் சீனி உரிய அளவில் விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

(அ)

# கண்டாவளை கமநல சேவை நிலையத்துக்குத் தீ வைப்பு!

கிளிநொச்சி, நவ. 11

கிளிநொச்சி கண்டாவளை கமநல சேவை நிலையத்தில் உள்ள சில பொருட்களுக்கு நேற்று முன் தினம் மாலை விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை கமநல சேவை நிலையத்தில் நேற்று முன் தினம் அலுவலக கடமைகள் முடித்து அலுவலகம் பூட்டப்பட்ட பின்னர் அங்கிருந்த கதிரை மற்றும் ஆவணங்கள் சிலவற்றுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்துக்குள் தீ எரிவது தொடர்பில் அவதானித்த கடமைக்கு வந்த காவலாளி, சம்பவம் தொடர்பில் உரிய அதிகாரிக்கு தகவல் வழங்கியதை அடுத்து உடனடியாக தீ அணைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஏற்கனவே குறித்த கமநல சேவை நிலையத்தின் பெயர்ப்பலகை சேதமாக்கப்பட்டுள்ளதுடன், கற்கள் மற்றும் வெற்றுப் போத்தல்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கனியவள கூட்டுத்தாபன களஞ்சியங்களில் போதிய எரிபொருள் கையிருப்பில் இல்லை!

கொழும்பு, நவ. 11

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தில் பல்வேறு கோளாறுகள் மற்றும் முறைகேடுகள் உள்ளதாக கோப் எனப்படும் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக்குழு கண்டறிந்துள்ளது.

அத்துடன் அவசர தேவைகளுக்கு கனியவள கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைகளில் போதுமான எரிபொருள் கையிருப்பில் இல்லை என்றும் அந்த குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கனியவள கூட்டுத்தாபனத்தில் நிலவும், பல நிர்வாக திறமையின்மைகள் மற்றும் முறைகேடுகளை ஆராய்வதற்காக கோப் குழு, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் சாலிய விக்ரமசூரிய உட்பட பல அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

அவர்களுடனான கூட்டத்தின் போது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய செயல்திறன் ஆகியவை குறித்தும் ஆராயப்பட்டன.

இதன்போது கோப் குழு எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர், நாட்டில் அவசரகால சூழ்நிலையில் பயன்படுத்துவதற்கு 60 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலும், 45 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலும் கையிருப்பில் உள்ளதாக குறிப்பிட்டார்.

(அ)

# வடமராட்சி பண்பாட்டுப் பெருவிழா





வடமராட்சி, நவ. 11

வடமராட்சி பண்பாட்டு பெருவிழா - 2023 நிகழ்வுகள் வல்வெட்டித்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும் நிதி அனுசரணையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் வடமராட்சி வடக்கு கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் வல்வை முத்துமாரி அம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நேற்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ் சிறப்பு விருந்தினராகவும், வல்வை முத்துமாரி அம்மன் ஆலய தலைவர் நா. வர்ணகுலசிங்கம் மற்றும் மூத்த கலைஞர் கலாபூசணம் யோ. இருதயராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக பங்கேற்றிருந்தனர்.



முன்னதாக, காலை 9.30 மணிக்கு ஆரம்பித்த பண்பாட்டு பவணியுடன் விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர் வரவேற்பை தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றது.

(அ-2)

# இலஞ்சம் வாங்கிய அதிகாரி சிக்கினார்

கொழும்பு, நவ. 11

பனாகொடை பிரதேசத்திலுள்ள கடையொன்றில் பணி புரியும் ஐந்து ஊழியர்களை, வருங்கால வைப்பு நிதியுடன் இணைக்காமல் கடையை நடத்துவதற்கு 400,000 ரூபாவை வர்த்தகரிடம் இருந்து இலஞ்சமாக கேட்ட அதிகாரியொருவரை கைது செய்ததாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடையில் பணி புரியும் 5 ஊழியர்களுக்கு 11 இலட்சம் ரூபாவை ஊழியர் சேமலாப நிதியாக செலுத்த வேண்டியுள்ளதாகவும், அத்தொகையை செலுத்தாமல் இருக்க தேவையான வேலைகளை செய்வதற்கு 4 இலட்சம் ரூபா பணம் கேட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நவகமுவ, ரணால பிரதேசத்தை சேர்ந்த, தொழிலாளர் திணைக்களத்தின் கள அதிகாரி என கூறப்படும் 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

(அ)

# பாவனையாளர் அதிகார சபையால் வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, நவ. 11

**அரசாங்கத்தால் சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.**

சீனிக்கான ஆகக்கூடிய கட்டுப்பாட்டு விலையை விதித்து அதற்கிணங்க சீனி வியாபாரத்தில் ஈடுபடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சீனி ஒரு கிலோகிராம் ஆகக் கூடுதலான சில்லறை விலையாக வெள்ளை சீனி பொதி செய்யப்படாத நிலையில் 275.00 ரூபாவிற்கும், பழுப்பு அல்லது சிவப்பு சீனி 330.00 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும், அதே வேளை பொதி செய்யப்பட்ட நிலையில் வெள்ளை சீனி 295.00 ரூபாவுக்கும், பழுப்பு அல்லது சிவப்பு சீனி 350.00 ரூபாவிற்கும் விற்கப்பட வேண்டும்.

குறித்த ஆகக்கூடிய சில்லறை விலைக்கு அதிகமாக சீனி இறக்குமதியாளர், உற்பத்தியாளர், விநியோகத்தர், வழங்குநர் அல்லது வியாபாரி எவருமோ விற்பனை செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது 12 வியாபார நிலையங்களில் சுற்றிவலைப்பில் ஈடுபட்டுள்ளதுடன், அதில் 6 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றில் தலா 2 வியாபாரிகள் சீனியை அதிகரித்த விலையில் விற்றமைக்காகவும், சீனியின் விலையை காட்சிப்படுத்தவில்லை என்றும், கீரி சம்பா அரிசியை அதிக விலையில் விற்றமைக்காகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

(அ)



## கிண்ணியா மத்திய கல்லூரி பாவனைக்காக தௌபீக் எம்.பியால் நீர்த்தாங்கி கையளிப்பு

திருமலை, நவ. 11

கிண்ணியா மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் அதிபரின் வேண்டுகோளுக்கமைய திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் யின் முயற்சியால் 5000 லீற்றர் நீர்த்தாங்கி கடந்த வியாழக்கிழமை பாடசாலை நிர்வாகத்திடம் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஐ.எஸ்.ஆர்.சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பாடசாலை நிருவாகம் மற்றும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

## எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் கலையுடன்கூடிய அலங்கார வகுப்புகள்



அம்பாறை, நவ. 11

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் கவின் கலையுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட வகுப்புக்கள் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் வறிய, பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆரம்பப் பிரிவு 01 ஆம் ஆண்டின்

வகுப்பாசிரியைகளான எம்.பி. பாயிஸா, திருமதி என்.எப். பைஸால், 02 ஆம் ஆண்டு கே. ஹப்ஸா, 03 ஆம் ஆண்டு ஏ.எஸ். ஐனுல் சஜானா, 04 ஆம் ஆண்டு எஸ்.எச். மர்சுக்னா, 05 ஆம் ஆண்டு ஏ.டபிள்யூ. றினோஸியா ஆகிய ஆசிரியைகளின் சொந்த நிதியிலிருந்தும் இவ்வகுப்பறைகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது அதிதிகள் குழுவினர் அழகுபடுத்தப்பட்ட தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான 06 வகுப்பறைகளையும் ஒவ்வொன்றாகப் பார்வையிட்டன.

வகுப்பறைகளை உயிரோட்டம் கொடுத்தமைக்காக வகுப்பாசிரியைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி வருடாந்த ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம்!

காரைதீவு, நவ. 11

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சிறீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த கந்த சஷ்டி விரதம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது என்று ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

விரதகாலத்தில் தினமும் விசேட பூசைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவசிறீ அங்குசநாதக்குருக்கள் உதவியோடு இடம்பெற இருக்கிறது.

எதிர்வரும் 18 ஆம் திகதி சூரசம்ஹார நிகழ்ச்சி இடம்பெற இருக்கின்றது .

மறுநாள் 19ஆம் திகதி திருக்கல்யாண நிகழ்வோடு கந்த சஷ்டி விரதம் நிறைவடைய இருக்கிறது எனவும் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மேலும் தெரிவித்தார். (அ)

# மட்டக்களப்பு பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக எந்திரி பிரதீபன்

மட்டக்களப்பு, நவ. 11

மட்டக்களப்பு பிராந்திய மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய எந்திரி. ஏ.இராஜகோபாலசிங்கம் மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்து கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக

கடமையாற்றிய இலங்கை பொறியியல் சேவை தரம் ஐ இல் உள்ள, கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த பொறியியலாளர் கந்தசாமி பிரதீபன் மட்டக்களப்பு பிராந்திய மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையின் புதிய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் நியமனம் பெற்று கடந்த





திங்கட்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்மாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் விஞ்ஞானமானி பட்டத்தை சிவில் துறையில் பெற்ற பட்டதாரியான இவர், இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் பட்டயப் பொறியியலாளரும் ஆவார்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 16 வருடகாலமாக கடமையாற்றி வருகின்ற சிரேஷ்ட பொறியியலாளரான இவர் மட்டக்களப்பு பிராந்தியத்திற்குட்பட்ட செங்கலடி மற்றும் பட்டிருப்பு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுகளுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளராகவும் கடமையாற்றி நீர்ப்பாசன அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பினை வழங்கியவர். (அ)

# புதிய ஆக்கப் படைப்புகள் போட்டியில் சாதித்த மட்டக்களப்பு மேற்கு வலயம்

மட்டக்களப்பு, நவ. 11

கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்ற அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புதிய ஆக்கப் போட்டித் தொடரின் கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்ட போட்டி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பல பாடசாலை மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சியடையும் இச் சூழ்நிலையில் உலகம் ரோபோ தொழில்நுட்பம் புதிய கண்டுபிடிப்புக்களை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் நிலையில் இத்துறைசார்ந்த அறிவு, திறன், நுட்பங்களை மாணவர்களிடம் வளர்த்தெடுத்து எதிர்கால வேலை உலகிற்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சானது இப் போட்டியினை வருடா வருடம் நடத்துகின்றது.

குறிப்பாக இப் போட்டித் தொடரானது ரோபோ தொழில்நுட்பம் தொடர்பான பிரிவு மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான பிரிவு என்கின்ற இரண்டு பிரிவுகளில் உற்பத்தித்தொழில் மற்றும் சுற்றுச்சூழல் கல்வித்துறை, கல்வித்துறை, பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித்துறை, பொழுதுபோக்குத்துறை, சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறை என 5 துறைகளின் கீழ் நடத்தப்படுகிறது.

நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தை சேர்ந்த 8 மாணவர்கள் பங்கு பற்றி இருந்ததுடன் அதில் மட்டக்களப்பு, மண்முனை மேற்கு கன்னங்குடா மகா வித்தியாலய மாணவன் என்.கிரோஜன் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரிவில் சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறையில் போட்டியிட்டு முதலாவது இடத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன், மட்டக்களப்பு ,மண்முனை மேற்கு வவுனதீவு பரமேஸ்வரா வித்தியாலய மாணவன் கே.கவிராஜ் ரோபோ தொழில்நுட் பம் தொடர்பான பிரிவில் கல் வித்துறையில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டனர்.

அத்தோடு மண்முனை மனைக்காடு மேற்கு விவேகானந்த மகா வித்தியாலய மாணவன் கே. டிபாணுஜன் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித்துறையில் 3 வது இடத்தை பெற்றுக்கொண்டுள்ளதோடு முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய மாணவன் கே.கபிலாஸ் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரிவில் உற்பத்தித்தொழில் மற்றும் சுற்றுச்சூழல் கல்வித்துறையில் போட்டியிட்டு மெரிட் சான்றிதழையும் மகிழவட்டுவான் மகா வித்தியாலய மாணவன் பீ. ஜரோட்சன் ரோபோ பிரிவில் சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறையில் மெரிட் சான்றிதழையும் பெற்றதோடு 3 மாணவர்களுக்கு திறமைக்கான சான்றிதழும் வழங்கப்பட்டது.

# ஹமாஸ் படையினருடன் ஊடகங்களுக்கு தொடர்பு!

## இஸ்ரேல் பரபரப்பு குற்றச்சாட்டு

டெல் அவிவ், நவ. 11

**சர்வதேச ஊடகங்களுக்கும் ஹமாஸ் படையினருக்கும் தொடர்பு இருப்பதாக இஸ்ரேல் குற்றம் சுமத்தியுள்ளது.**

**ஊடகங்களில் வெளிவரும் செய்திகளின் நம்பகத்தன்மை குறித்து கண்காணிக்கும் இஸ்ரேலின் ஹானஸ்ட்ரிபோர்டிங் என்ற அமைப்பே குறித்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.**




இது குறித்து ஹானஸ்ட்ரி போர்டிங் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது “காசா பகுதியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்களும், சர்வதேச ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் சிலரும், ஹமாஸ் அமைப்பினர் தாக்குதலில் ஈடுபடும் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில் காணப்படுகின்றனர்.

எனவே அவர்களுக்கு இத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. அத்துடன் பிரபல சர்வதேச ஊடகங்களான ரொய்டர்ஸ், தி அசோசியேட்டட் பிரஸ் மற்றும் தி நியூயோர்க் ரைம்ஸ் ஆகிய சர்வதேச ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதிஇஸ்ரேலிய இராணுவ டாங்க் ஒன்றை ஹமாஸ் எரிக்கும் போதும், இஸ்ரேலில் இருந்து பணயக்கைதிகளாக பலரை ஹமாஸ் கொண்டு செல்லும் போதும் அருகிலேயே இருந்து குறித்த ஊடகவியலாளர்கள் அவர்களைப் படம் பிடித்துள்ளனர்.

அப்படியானால் இத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே ஊடகவியலாளர்களுக்கு தெரியவந்துள்ளதா? மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு அவர்கள் துணை நிற்கின்றார்களா? பத்திரிகை தர்மத்தையும், தொழில் தர்மத்தையும் மீறிய செயல் இது என்பதால், இதனை இஸ்ரேல் தீவிரமாகக் கண்டிக்கின்றது” இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை இவ்விடயம் இது குறித்து சில சர்வதேச ஊடகங்களின் தலைமையகங்களுக்கு இஸ்ரேல் தகவல் அனுப்பி விளக்கம் கோரியுள்ளது. எவ்வாறு இருப்பினும் இக் குற்றச்சாட்டை ரொய்டர்ஸ் நிறுவனம் மாத்திரமே மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மனிதனைக் கொன்ற ரோபோ!

## தென்கொரியாவில் பரபரப்பு



சியோல், நவ. 11

தென்கொரியாவிலுள்ள தொழிற்சாலையொன்றில் ரோபோவொன்று பெட்டிக்கு பதிலாக ஊழியர் ஒருவரை பெல்டில் ஏற்றி கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் தெற்கு கியோங்சாங் மாகாணத்திலுள்ள காய்கறிகளை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் காய்கறிப் பெட்டிகளை கன்வேயர் பெல்டில் ஏற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ரோபோ வொன்றே, காய்கறி பெட்டிக்கு பதிலாக அங்கிருந்த ஊழியர் ஒருவரை கன்வேயர் பெட்டியில் வைத்து அவரது மார்பையும், முகத்தையும் நசுக்கி ஏற்றியுள்ளது.

இதில் படுகாயமடைந்த ஊழியர் அங்கிருந்து வெளியே வர முடியாமல் கதற, அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் அந்நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் “இனி வரும் காலங்களில் இதுபோன்ற விபத்துக்களை தடுக்க துல்லியமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்” என குறித்த தொழிற்சாலை தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில் ரோபோக்கள் மூலம் இதுபோன்ற விபத்துக்கள் நடப்பது இது முதல் முறை அல்ல. இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம், வாகன உதிரிப்பாகங்கள் தொழிற்சாலையில் பணியாற்றி வந்த ரோபோ அங்குள்ள ஊழியரைக் கடுமையாக தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரித்தானிய மஹாராணியை கௌரவிக்கும் வகையில் சிலை



ஒன்றாரியோ, நவ. 11

கனேடிய மக்கள் மறைந்த பிரித்தானிய மஹாராணியை கௌரவிக்கும் வகையில் சிலையொன்றை நிறுவியுள்ளனர்.

ஒன்றாரியோ சட்ட மன்றில் முன்னாள் மஹாராணியின் சிலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் இந்த சிலையை திறந்து வைத்துள்ளார்.

குயின்ஸ் பார்க்கில் அமைந்துள்ள சட்டமன்றில் இவ்வாறு மஹாராணியின் வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

மறைந்த பிரித்தானிய மகாராணி, ஒன்றாரியோவின் வரலாற்றுக்கும் மரபுரிமைகளுக்கும் வழங்கிய பங்களிப்பினை போற்றும் வகையில் இந்த சிலை நிர்மானிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

ஏழு தசாப்தங்களாக மஹாராணி மாகாண மக்களுக்கு சேவையாற்றியுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். சிலையை நிர்மானிப்பதற்காக சுமார் ஒன்று தசம் ஐந்து மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தெற்கு காசாவை நோக்கி படையெடுக்கும் மக்கள்!

ஜெருசலேம், நவ. 11

காசாவின் வடக்கு பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்தும் இருவழி தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அங்குள்ள மக்கள் தெற்கு காசாவை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 15 ஆயிரம் பேர் வடக்கு காசாவை விட்டு வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் தொடங்கிய ஒரு வாரத்தில் இஸ்ரேல் இராணுவம் விடுத்த எச்சரிக்கையை அடுத்து முன்னதாக பல்லாயிரக்கணக்கான மக்கள் தெற்கு காசாவுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கலில் பலர் சோதனை சாவடிகளை கடக்கும் போது இஸ்ரேலிய படைகளால் கைது செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேல் இராணுவம் காசாவின் வடக்குப் பகுதியை மட்டுமல்லாமல் கான் யூனிஸ் நகரம் உட்பட தெற்குப் பகுதியையும் தொடர்ந்து தாக்கிவருகிறமை குறிப்பிடத்தக்கது.

# மாற்றுப் பாலினத்தவரும் ஞானஸ்நானம் பெறலாம்

## வத்திக்கான் ஒப்புதல்



வத்திக்கான் சிற்றி, நவ. 11

மாற்று பாலினத்தவரும் ஞானஸ்நானம் பெற வத்திக்கானின் கோட்பாட்டு அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது. அவர்களே ஞானப் பெற்றோராக இருந்தும் தமக்குத்தாமே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் கத்தோலிக்க திருமணங்களில் சாட்சிகளாக இருக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நெக்ரி என்ற அருட்தந்தை ஒருவர் கடந்த ஜூலை மாதம் 6 கேள்விகள் அடங்கிய ஒரு தொகுப்பை வத்திக்கானுக்கு அனுப்பியிருந்தார். அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்தும், அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்குதல் குறித்தும் கேட்கப்பட்டிருந்தது.

இந்த கேள்விகளுக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் வத்திக்கானின் நம்பிக்கைக்கான கோட்பாட்டுத் துறை பதிலளித்துள்ளது. பாப்பரசர் பிரான்சிஸ் ஒப்புதலுடன் கூடிய மூன்று பக்க கடிதத்தை அருட்தந்தை ஜோசப் நெக்ரிக்கு அது அனுப்பி வைத்தது.

அதில் மாற்று பாலினத்தவர் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் ஆகியோர் திருச்சபைகளில் ஞானஸ்நானம் பெறலாம் என்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நம்பிக்கையில் எந்தவித மாற்றங்களோ அல்லது குழப்பங்களோ இருக்கக் கூடாது என்ற நிபந்தனையையும் வாடிகன் முன்வைத்துள்ளது.

அதே போல, உள்ளூர் அருட்தந்தையின் விருப்பத்துக்கேற்ப, மாற்று பாலினத்தவர் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் கிறிஸ்தவ திருமணங்களில் சாட்சியாக இருக்கலாம். அதற்கு உள்ளூர் அருட்தந்தையின் ஒப்புதல் அவசியம் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் ஞானஸ்நானத்தில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் பங்கு என்ன என்பது குறித்த தெளிவான விளக்கங்கள் எதுவும் கூறப்படவில்லை.

(அ)

# தமிழர் அரசியல் தீர்வு விடயத்தில் ஆஸியின் மத்தியஸ்தம் வேண்டும்

## இரா.சாணக்கியன் கோரிக்கை

கொழும்பு, நவ. 11

**அவுஸ்திரேலிய அரசானது எமக்கான அரசியல் தீர்வு விடையத்தில் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.**

**அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.**

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இரா.சாணக்கியன்-

குறித்த சந்திப்பில் போது சமகால அரசியல் தொடர்பாகவும் குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பகுதிகளில் காணப்படும் பிரச்னைகள் தொடர்பான முழு விவரங்களை அறியும் முகமாகவும் அதற்கான தீர்வுகளை பற்றியதாக இருந்தது.

மற்றும் எமது கட்சியின் எதிர்கால மாநாடு தொடர்பாகவும் இளைஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அவுஸ்திரேலியாவும் எமது நாட்டைப் போல் கூட்டாச்சி அரசியல் அமைப்பைக் கொண்ட நாடாகும் மாநிலங்கள் போல் இங்கு மாகாணமாக காணப்படுகின்றது.



அங்கு மற்றைய நாடுகளை போல் அல்லாது இலங்கையை சேர்ந்த புலம்பெயர்ந்த சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என பலர் வாழ்ந்து வருகின்றார்கள்.

அதன் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் அவுஸ்திரேலியாவை நடுநிலைமை வகிக்கும் நாடு என்ற வகையில் ஏற்றுக் கொள்ளும் என்ற ரீதியில் அவுஸ்திரேலிய அரசானது எமக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும்-என்றார். (அ)

# 5 லட்சம் போதை மாத்திரைகளுடன் இருவர் கற்பிட்டிப் பகுதியில் கைது!

கொழும்பு, நவ. 11

கற்பிட்டி - இரமதீவு பகுதியில் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 5 இலட்சத்து 70 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டனர்.

கற்பிட்டி - நுரைச்சோலை பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 39 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இரம தீவுப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிங்கி படகு ஒன்றினை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே குறித்த மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

குறித்த இயந்திர படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 பெட்டிகளில் போதை மாத்திரைகள் காணப்பட்டதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 5 இலட்சத்து 70 ஆயிரம் போதை மாத்திரைகளும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக புத்தளம் மாவட்ட போதை ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்படையினர் மேலும் கூறினர். (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 11

தம்பகல்ல - ருவன்வெல்ல பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் ருவன்வெல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ருவன்வெல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ருவன்வெல பிரதேசத்தை சேர்ந்த 71 வயது நபர் ஆவார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ருவன்வெல்ல பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# மாணவர்களுக்கு கறுவா மரக்கன்றுகள் விநியோகம்!



யாழ்ப்பாணம், நவ. 11

மரநடுகை மாதத்தை முன்னிட்டு, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்களுக்குக் கறுவா மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ச. விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

பொருளாதாரப் பயன்கருதி அண்மைக்காலமாக வடக்கிலும் கறுவாச் செய்கை முக்கியத்துவம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விளையாட்டுச் சட்டமூலம் தொடர்பான நிபுணர் குழு அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, நவ. 11

தற்போதுள்ள விளையாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை குழுவின் தலைவர் ஜகத் பெர்னாண்டோவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முறையான வரைவு தயாரிக்கப்பட்டு புதிய விளையாட்டு சட்டம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையின் தற்போதைய சட்ட கட்டமைப்பு மற்றும் விளையாட்டு நிர்வாகத்தின் தற்போதைய கட்டமைப்பை ஆராய்ந்த பின்னர், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இந்த நிபுணர் குழு அறிக்கையின் முதன்மையான பரிந்துரைகளில் ஒன்று, தற்போதுள்ள சட்டத்தை முழுமையாக மாற்றுவதற்கு தேசிய விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழுவை நிறுவுவதாகும்.

விளையாட்டுக்கள் தொடர்பான கொள்கை தயாரிப்பு மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

8 அடிப்படை நோக்கங்களை அடைய இந்த தேசிய விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழுவை அமுல்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் பதவிக் காலம் 4 வருடங்களாகும், அதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் நியமனங்களை அரசியலமைப்பு சபைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (அ)

# வரவு-செலவுத் திட்டத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு!

கொழும்பு, நவ. 11

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையில், நேற்று முதல் பாராளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுலில் இருக்கும்.

"நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்ட உரை முன்வைக்கப்படவிருப்பதை முன்னிட்டு கடந்த வருடங்களைப் போன்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன." - என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கமைய, நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள், ஆடை அலுமாரிகள் உட்பட பாராளுமன்றத்தின் முழு கட்டடமும் பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்படும் எனவும் சபாநாயகர் கூறினார்.

அதேவேளை வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 13ஆம் திகதி பொதுமக்கள் கலரி வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

பாராளுமன்ற வாகனத் தரிப்பிடம் அன்றையதினம் மூடப்பட்டிருப்பதுடன், உறுப்பினர்கள் வருகை தரும் வாகனங்கள் உரிய தரிப்பிடத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. அன்றைய தினம் பாராளுமன்றத்துக்கு வருகைதரும் உறுப்பினர்கள் முடிந்தளவு தமது சாரதிகளுடன் வருமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது வாகனத்தை தாமே செலுத்திவந்தால் அவ்வாகனங்களை வாகனத் தரிப்பிடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு உறுப்பினர்களின் நுழைவாயிலுக்கு அருகில் பாராளுமன்ற பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் தனது அறிவிப்பில் தெரிவித்தார்.

அத்துடன், அன்றையதினம் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார். (அ)

# வகுப்பறைக்குள் கஞ்சாவை புகைத்த ஆசிரியர்கள் கைது

கொழும்பு, நவ. 11

பிரபல பாடசாலை ஒன்றில் கடமை நேரத்தில் போதைப் பொருள் (கஞ்சா) புகைத்த இரண்டு ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் வெலிமடையில் பதிவாகியுள்ளது.

அவர்கள் சங்கீத வகுப்பறையில் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்தபோது பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

இரகசிய தகவலாளரின் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்படும்போது சந்தேகநபர்கள் 1.9 கிராம் போதைப் பொருளை வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பத் அபேவிக்ரமின் தலைமையிலான பொலிஸ் குழு இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டது. (அ)

## இலங்கை....

கிரிக்கெட் எதிர்க்கொண்டுள்ள நிலைமை மற்றும் அதன் கடமைகள், நிர்வாகம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போதே இலங்கை கிரிக்கெட்டை தற்காலிகமாக தடை செய்வது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தற்காலிக தடையின் நிபந்தனைகள் என்ன என்பது தொடர்பில் உடனடியாக அறிய முடியாத நிலையில், நிபந்தனைகள் தொடர்பில் மிக விரைவில் அறிவிக்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது. (அ)

## கொழும்பு....

கையளிக்கப்பட்டதாக நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிவசேனை அறிவித்துள்ளது.

அந்த நான்கு கோரிக்கைகளாவன,

1) 1987 இந்தியா இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை இணைத்து இந்து மக்களுக்கு தனி மாகாணத்தை உருவாக்க வேண்டும்.

2)தமிழகத்தில் உள்ள பாரதிய வித்தியா பவன் அமைப்பை அழைப்பு யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் கலைகள் இசைகள் என்பவற்றை கற்பிக்கவேண்டும்

3)காங்கேசன்துறை - நாகப்பட்டினம் துறைமுகங்களில் இலங்கை மற்றும் இந்திய ரூபாயை மாற்ற வங்கி வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

4)மதமாற்றம் செய்பவர்களை இந்தியாவில் இருந்து இலங்கைக்குள்ளும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குள்ளும் அனுமதிக்க கூடாது என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை....

நாளில் மேற்பபடி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவில் 1200ஹெக்ரேயர் பரப்பளவில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்வதற்கு டோக்கியோ நிறுவனம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், பலாவி அனைத்து மக்கள் ஒன்றியம் சார்பாக பொது மக்கள் நேற்று நூறாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த நிறுவனத்தினரால் தங்களது பிரதேசங்களில் சுண்ணகல் அகழ்வு மேற்கொள்ளப்படுமாயின் தங்களது பூர்வீக கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து பிரதேசங்கள் உவராகி வாழ முடியாத சூழல் ஏற்பட்டு தாம் கிராமங்களை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்றும், சீமெந்து தொழிற்சாலையின் தூசு உள்ளிட்ட கழிவுகளால் நோய்த்தாக்கம் ஏற்படும் என்றும் மற்றும் தங்களது விவசாய முற்றுமுழுதாக பாதிக்கப்படுவதோடு, கடல் தொழிலும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்து அதற்கு அனுமதிக்க கூடாது என்று கோரிக்கையினை முன்வைத்து போராடி வருகின்றோம் எனத் தெரிவித்தனர்.

இன்று எங்களது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நூறாவது நாள் தென்னிலங்கையிலிருந்து வருகைதந்துள்ள பல அமைப்புக்கள் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த அமைப்புக்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என எங்களுடன் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேரவில் மண்ணை சுடுகாடு ஆக்காதே, வேண்டாம், வேண்டாம் சீமேந்து கம்பனி வேண்டாம், சுண்ணக்கல் அகழ்வை உடன் நிறுத்து, அமைச்சரே எங்கள் கிராமங்களை விற்க இரகசிய கூட்டம் நடத்தாதே, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் ஏந்தியிருந்தனர். (அ)

## நடு வீதியில்....

பட்டு ஆனைக்கோட்டை முதல் சுழிபுரம் வழக்கம்பரை வரையான வீதி புனரமைப்பு பணிகளுக்கு உள்ளான நிலையில் வழக்கம்பரை முதல் பொன்னாலை வரையான வீதி எதுவித புனரமைம்புக்களும் இன்றி குளம் போல காட்சியளித்து வருகின்றன.

இந்நிலையில் நேற்று காலை பொன்னாலை மற்றும் மூளாய் பகுதியைசேர்ந்த விவசாயிகள் ,சிறுவர்கள் , பொதுமக்கள் இணைந்து காரைநகர் மானிப்பாய் யாழ்ப்பாணம் பிரதான வீதியின உழவு இயந்திரம் மாட்டு வண்டிலை கொண்டு இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பொழுது வெள்ளத்தினால் நீந்தியா செல்வது !ரணில் அரசாங்கமே எங்கள் மீது ஏன் இந்த பாரபட்சம் ! வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளே உங்களுக்கு கண் இல்லையா !சைக்கிள் உடைகிறது சட்டை சேறாகிறது நடந்து சென்றால் கால்கள் புண் ஆகிறது அரச அதிகாரிகளே எங்களையும் பாருங்கள் ! வழக்கமப்ரை முதல் பொன்னாலைவரை வாழும் மக்கள் மந்தைகளா? ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக வீதியில் குளம்போல சேதமடைந்து காணப்பட்டட பகுதியில் ஏர் கலப்பை பூட்டி கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து தேவாரம் பாடி ஏர் உழுவது போல ஆற்றுகை செய்து நெல் மணிகளை வீதியில் விதைத்தனர்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள் எமக்கென இன்று வட்டுகோட்டை பகுதியில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இன்றி தவிக்கின்றோம் . இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் கடமைக்கு இருக்கின்றார்கள்.

வீதியால் பயணிக்கின்ற பாடாசலை மாணவர்கள் வயது முதிர்ந்தவர்கள் பெண்கள் சிறுவர்கள் வாகன ஒட்டுனர்கள் என பலரும் இதனால் தமது அன்றாட வாழ்வியலை அச்சத்திற்குள்ளாக கடக்கின்றார்கள்.

இதனால் விபத்துக்களும் பதிவாகியுள்ள்து. இதனை கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை வெகுவிரைவில் புனைரமைப்பு பணிகளை முன்னெடுக்கப்பட வேண்டும்.இல்லையெனில் நிச்சயமாக இவ்வீதிகளை விவசாய நிலங்களாக மாற்றுவோம் என தெரிவித்தனர்.

இதன்காரணமாக சுமார் 1 மணித்தியலாமாக குறித்த வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதன்பொழுது மூளாய் பொன்னாலை பகுதி சிறுவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## முன்னாள்....

விசாரணையின் பின்னர் நேற்று காலை விடுவிக்கப்பட் டனர்.

2006 ஆம் ஆண்டு இலங்கைக்கான பாகிஸ் தான் தூதுவராக இருந்த வசீரை படுகொலை செய்ய சதி செய்து முச்சக்கர வண்டியில் வெடி குண்டு வைத்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்களே விடுவிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அல்லது அதற்கு அருகில் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டுகள் வாதிகளால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் நேற்று தனது உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக 25 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நீண்ட விசாரணைக்குப் பிறகு தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் ரஞ்சன் எனப்படும் கனகரத்தினம் ஆதித்தன், ஸ்டார்ஸ் எனப்படும் யோகராஜா நிரோஷன் மற்றும் முச்சக்கர வண்டி சாரதி சுப்ரமணியம் சோதிராஜா ஆகியோரே விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் அரச தரப்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி யோகான் அபேவிக்கிரம ஆஜராகியதுடன் கனகரத்தினம் ஆதித்தியன் சார்பில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா சட்டத்தரணி கனில் மத்துமகே ஆஜராகினர்.

மற்றய எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான கனகா சிவபாதசுந்தரம் மற்றும் தனுக மத்துமகேயும் ஆஜராகினர்.

அண்மைய இலங்கை நீதித்துறை வரலாற்றில் 15 வருடங்களாக தடுப்புக் காவலில் இருந்து, நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட கைதியாக கனகரத்தினம் ஆதித்தன் குறிப்பிடப்படுகின்றார். 2009 இல் கைது செய்யப்பட்டது முதல் நேற்று விடுதலையாகும் வரை அவர் தடுப்புகாவல் கைதியாகவே வைக்கப்பட்டிருந்தார்.

## இந்திய...

தொடர்ந்தும் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்திய மீனவர்களே எமது கடல் வளங்களை அழிக்காதே, கடற்படையே அத்துமீறிய இந்திய மீனவர்களை கைது செய், கடற்றொழில் அமைச்சரே, ஜனாதிபதியே எமது கோரிக்கைகளை நிறைவேற்று என கோஷங்களை எழுப்பிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சருக்கு அனுப்புவதற்கான மகஜர்களை கையளித்தனர்.

குறித்த மகஜரில், "அத்துமீறி எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடல் பரப்பில் சட்ட விரோதமான இழுவைமடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை தாங்கள் அறிந்ததே.

இதன்காரணமாக. வடக்கு மாகாணம் கடற்றொழிலாளர்களாகிய எங்களின் வாழ்வாதாரமும் எமது கடல் வளங்களும் அழிக்கப்படும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

தொடர்ச்சியாக, எங்களது கடல் பரப்பில் நுழைகின்ற நூற்றுக்கணக்கான இந்திய ரோலர் படகுகள காரணமாக மீன் உற்பத்திக்கு ஏதுவான பவளப் பாறைகள் அழிக்கப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் எமது கடற்பரப்பில் கடலுணவுகள் அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் மக்களுக்கு தேவையான புரதச்சத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாகி வருகின்றது.

இந்த நிலை தொடருமானால் கடறொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்த்து வருகின்ற வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்காலத்தில் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும்.

இது தொடர்பாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைவாக கடற்றொழில் திணைக்களத்தினரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும், கடற்படையினரின் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதும் அவை போதுமான விளைவை ஏற்படுத்தவில்லை என்பதே கடற்றொழிலாளர்களாகிய எமது ஆதங்கமாகும்.

நாங்கள் எதிர்கொள்ளும் அவலங்களை தமிழக மக்களுக்கும், தமிழக தலைவர்களுக்கும் எடுத்துரைத்து, இந்த விவகாரம் தொடர்பான உண்மைகளையும், புரிதலையும் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்றத்தின் தீர்மானத்தை எதிர்க்க தயாராகும் சட்டமா அதிபர்

கொழும்பு, நவ. 11

இலங்கை கிரிக்கெட் சபை பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் நியமிக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் குழுவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவுக்கு எதிராக ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் தயாராகி வருவதாக அறிய முடிகிறது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அனைத்து அதிகாரிகளும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் இந்த எதிர்ப்பை முன்வைக்க சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (அ)

## தமிழ்....

முன்னதாக மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 13ஆம் திகதி விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், சபரகமுவ மாகாணத்தின் அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கும் 13ஆம் திகதி விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், நாட்டில் உள்ள அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கும் 13ஆம் திகதி விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரச....

தேவானந்தா தனது கருத்தினை வெளிப்படுத்தினார்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் குறித்த திட்டத்தின் ஊடாக உள்வாங்கப்பட்டவர்கள் இருக்கின்ற நிலையில், பிற மாவட்டங்களை சேர்ந்தவர்கள் நியமிக்கப்படும் பட்சத்தில்,

குறித்த விவகாரம் ஓரவஞ்சனையான தீர்மானங்களாக பாதிக்கப்படுகின்றவர்களினால் பார்க்கப்படும் என்பதுடன் தேவையற்ற அரசியல் குழப்பங்களுக்கும் வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, எதிர்காலத்தில் அரசாங்க நிறுவனங்களில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அந்தந்த மாவட்டத்தினை சேர்ந்தவர்கள் மூலமே வெற்றிடங்களை நிரப்புவதற்கு முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு தென்னிலங்கையை சேர்ந்த ஏழு சிற்றூழியர்களை நியமிப்பதற்கான முன்னெடுப்புகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், கடற்றொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களை திருப்பி அழைப்பதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

அதேவேளை இந்த கலந்துரையாடலில், எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் செயலகம் போன்றவற்றில் நந்திக் கொடி பறக்கவிட்டு தீபங்களினால் அலங்கரிப்பதற்கும், தற்போதைய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அசுவெசும திட்டத்திற்கு இந்த "ஆறுதல் திட்டம்' என்ற மொழிபெயர்ப்பினை தமிழ் மொழியில் பயன்படுத்தவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தலை பிற்போடுவது ஜனநாயகத்துக்கு அடி!

## மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, நவம்பர் 11

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவதில் எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று அந்தக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அதிகாரவர்க்க கட்டுப்பாட்டின் கீழ் மாகாண சபைகளைத் தொடர்ந்தும் நடத்துவது நாட்டின் ஜனநாயகத்துக்கு மரண அடி என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மகிந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை, அரசியல மைப்பில் திருத்தம் செய்வதைத் தவிர வேறு எந்த வகையிலும் பிற்போடுவதற்கான சாத்தியக்கூறு கள் இல்லை எனவும் மஹிந்த தேசப்பிரிய மேலும் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்தவும் முடியாது, தாமதிக்கவும் முடியாது. 2024 செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 17 வரையான காலப்பகுதிக்குள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவகால வீதித்தடை

யாழ்ப்பாணம், நவ. 11

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி உற்சவ காலத்தில் வழமை போல தற்காலிகமாக வீதிகள் தடை செய்யப்படவுள்ளது.

14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை மற்றும் 19.11.2023 ஆம் திகதியும் பி.ப 5.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணி வரையும் 18 ஆம் திகதி சூரன்போர் அன்று நண்பகல் 12.00 - பி.ப 7.00 மணிவரையும் அவ்வாறு வீதி தடைசெய்யப்படும். இதன்போது பொது மக்கள் மாற்றுப்பாதை ஒழுங்குகளை கடைப்பிடிக்குமாறு யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.(அ)

# இலங்கை மாணவர்களுக்கு அதிகளவு புலமைப்பரிசில்

கொழும்பு, நவ. 11

இலங்கை மாணவர் களுக்கு அதிக புலமைப் பரிசில் வாய்ப்புகளை எதிர்காலத்தில் இந்தியா வழங்க உள்ளது என இந்தியத் தூதுவர் நேற்று தெரிவித்துள்ளது.

இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், புலம்பெயர் குழந்தைகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கை மாணவர்களுக்கு இந்தியா அதிக உயர்கல்வி புலமைப் பரிசில்களை வழங்கும்.




இந்தத் திட்டம் தொழில்முறை (மருத்துவ மற்றும் தொடர்புடைய படிப்புகள் தவிர) மற்றும் தொழில் முறை அல்லாத படிப்புகள் இரண்டையும் உள்ளடக் கியது.

புலம்பெயர் குழந்தைகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் புலமைப்பரிசிலுக்கு தகுதி பெறும் மாணவர்கள் முதல் ஆண்டு மாணவர்களாக இருக்கவேண்டும்.

புலமைப்பரிசிலுக்கு இலங்கையில் இருந்து தகுதியான மாணவர்கள் எதிர்வரும் 10 டிசெம்பர் 2023 இற்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு தூதரகம் அறிவித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்கள் http://spdcindia.gov.in என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் எனவும் தூதரகம் கூறியுள்ளது. (அ)

# கடலில் அதிக பிளாஸ்ரிக் வெளியிடும் நாடுகளில் இலங்கைக்கு 14ஆவது இடம்

கொழும்பு, நவ. 11

கடலில் அதிக பிளாஸ்ரிக்கை வெளியிடும் நாடுகளில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பதிவான தரவுகளின்படி, நாட்டின் ஆறுகள் மற்றும் நீரோடைகள் மூலம் சுமார் 9,700 மில்லியன் மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் கடலில் சேர்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் 'பிளாஸ்ரிக் கழிவு மேலாண்மை தொடர்பான தொடர்பாடல் நிகழ்ச்சி' அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் போதே இவ் விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க, தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் ரொக்கியா கார்ல் டன் ஆகியோர் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் இது தொடர்பில் சுற்றுச் சூழல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவிக்கையில் ,

கடலில் உள்ள மீன்களின் அளவை விட பிளாஸ்ரிக்கின் அளவு அதிகரித்து வருகிறது. என தெரிவித்தார். (அ)

# பாடசாலைகளில் புலனாய்வுப் பிரிவு; இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 11

பொலிஸ் மற்றும் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி "புதிய சமூக புலனாய்வுப் பிரிவு" ஒன்றை நிறுவும் பாதுகாப்பு அமைச்சின் திட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, நாடுமுழுவது போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கு தவறிய பொலிஸாரை பாடசாலைக்குள் வரவழைத்து 'புதிய சமூக புலனாய்வுப் பிரிவு' ஒன்றை நிறுவும் பாதுகாப்பு அமைச்சின் திட்டத்தை எதிர்ப்பதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து புதிய சமூகப் புலனாய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்ததை அடுத்து அவர் இந்த விடயத்தை கூறினார்.

இந்த நிலையில், பாடசாலை கட்டமைப்பிற்குள் போதைப் பொருள் பாவனையை தடுக்கும் நோக்கம் உண்மையிலே அரசாங்கத்திற்கு இருக்குமானால், நாட்டில் போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கு பாடுபடவேண்டும் என ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

அத்துடன், பாடசாலைக்குள் போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கான திட்டத்தினை உருவாக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இருப்பினும், போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கான திட்டத்தினை உருவாக்க முடியவில்லை எனவும், போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதனை தடுக்க முடியவில்லை எனவும் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்குதல் மற்றும் அதனை பாடசாலைக் கல்வி முறைமையின் ஊடாக செயற்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும்!



கொழும்பு, நவ. 11

நாடளாவிய ரீதியில் உள்ள தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த்குமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்னாநாயக்கவினால் எழுப்பப்பட்ட வாய்மொழிமூல வினாக்களுக்கு பதிலளிக்கும் போதே, கல்வி இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றில் இதனை குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த் குமார் கூறினார். (அ)

# மாமனிதர் ரவிராஜ் எம்.பியின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ. 11

பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 17ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை காலை தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக உள்ள அவரது நினைவுச் சிலை முன்பாக உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து,தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, அரசியல் சமூக செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா. கிசோர், ரவிராஜின் உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)





இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# இலங்கை அணியில் இருந்து விடைபெறும் மூத்த வீரர்கள்

உலகக் கிண்ண போட்டித் தொடரில் இலங்கை அணி படுதோல்விகளை சந்தித்திருந்த நிலையில், அணிமீது ரசிகர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

அரசியல் தலையீடுகள் மற்றும் கடும் நெருக்கடிக்கு மத்தியில் உள்ள இலங்கை அணியில் இருந்து பல மூத்த வீரர்கள் விடைபெற உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் இடம்பெற்று வரும் உலக்கிண்ணத் தொடரில் பங்கு பற்றிய இலங்கை அணி 9 போட்டிகளில் 2 போட்டிகளில் மாத்திரமே வெற்றிபெற்றிருந்தது.

இலங்கை அணி சந்தித்த அனைத்து தோல்விகளும் படு தோல்விகளாகவே இருந்தன.

இந்நிலையில், இலங்கை அணி நேற்று காலை இலங்கையை வந்தடைந்தது.

உலகக் கிண்ண அணியில் இடம்பெற்றுள்ள பல மூத்த வீரர்கள், கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளதாக அணிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து இவர்கள் ஏனைய வீரர்களுடன் ஆலோசித்து வருவதாகவும், தங்கள் முடிவை விரைவில் அறிவிக்க தயாராகி வருவதாகவும் இலங்கை கிரிக்கெட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் இவர்களை கடுமையாக பாதித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

கிரிக்கெட் சபையின் அலுவலகப் பொறுப்பாளர்களை நீக்குவது தொடர்பான கூட்டுப் பிரேரணை, அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து வாக் கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன.

ஊழலற்ற, வெளிப்படையான கிரிக்கெட் நிர்வாகத்தை உருவாக்கவும், கிரிக்கெட் சபைக்கான புதிய சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் இந்த பிரேரணை நிறைவேற்றும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் அணி தோல்விக்கு பின்னால் குழு ஒன்று உள்ளது



இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்விக்கு பின்னால் குழுவொன்று செயற்படுவதாக இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வு குழு தலைவர் பிரமோதய விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை எதிர்கொண்ட இலங்கை அணி நேற்று அதிகாலை நாடு திரும்பியபோதே அவர் இதனை கூறினார்.

அந்த குழுவினர் இலங்கை கிரிக்கெட்டை தமது ஆளுகைக்குள் உட்படுத்த முயற்சி செய்து வருவதாகவும் அனைத்து தகவல்களையும் எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் ஊடகங்களின் மூலம் வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நிசங்க, மெண்டிஸ், சமரவிக்கிரம, அசலங்க, தீக்சன இடம்பெற்றுள்ள அணி எவ்வாறு மோசமாக ஆடும்?

நிசங்க, மெண்டிஸ், சமரவிக்கிரம, அசலங்க, தீக்சன போன்ற வீரர்களை கொண்ட அணி எவ்வாறு இவ்வாறு மோசமாக விளையாடமுடியும் என இந்திய கிரிக்கெட் வர்ணணையாளர் ஹர்சா போக்லே கேள்வி எழுப்பியுள்ளார்

இலங்கை அணி 2023 உலக கிண்ணப் போட்டிகளில் மிக மோசமான தோல்விகளை சந்தித்து நாடு திரும்பியுள்ள இந்த தருணத்தில் கிரிக்கெட் வர்ணணையாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்

இலங்கை அணி பதிலளிக்க வேண்டிய பல கேள்விகள் உள்ளன நிசங்க, மெண்டிஸ், சமரவிக்கிரம, அசலங்க தீக்சன போன்ற வீரர்களை கொண்ட அணி - எவ்வாறு இவ்வாறு மோசமாக விளையாடமுடியும் என ஹர்சா போக்லே கேள்வி எழுப்பியுள்ளார்.

என்னுடைய கருத்து வெளியிலிருந்து பார்ப்பவனின் கருத்து என்னுடைய கருத்து முற்றிலும் மிகச்சரியானதாக இல்லாமலிருக்கலாம். இடைக்காலம் என்ற வார்த்தை தொடர்ச்சியாக இருக்க முடியாது இலங்கை மீண்டும் எழுச்சி பெறும் என நினைக்கின்றேன் என அவர் தெரிவித்தார்.



இலங்கை அணியின் ஏமாற்றமளித்த உலகக் கிண்ணத் தொடர் முடிவுக்கு வந்துள்ளது என தெரிவித் துள்ள வர்ணணையாளர் பர்வீஸ் மஹ்ரூவ், சிறந்த விளையாட்டுக்கான சாயல்கள் தென்பட்டாலும் போட்டித்தொடர் முழுவதும் அவர்கள் எதிர்பார்க் கப்பட்டதை விட மோசமாக விளையாடினார்கள் என பதிவிட்டுள்ளார்.

முன்னாள் வீரர் என்ற அடிப்படையில் தற்போதைய வீரர்கள் எங்களின் பாணியில் விளையாடுவார்கள் என்றே எதிபார்த்தேன் அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என மஹ்ரூவ் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால குறுகிய கால இலக்குகளை முன்வைத்து சில கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# நாடு திரும்பிய இலங்கை அணி



2023 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்ற இலங்கை கிரிக்கெட் அணி நேற்று காலை நாடு திரும்பியுள்ளது.

நேற்று முன் தினம் போட்டியில் நியூசிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதை அடுத்து 2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சென்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை இலங்கை அணி இழந்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46 ஓவர்கள் 4 பந்துகளில் 171 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இந்த நிலையில் வெற்றி இலக்கை 23 ஓவர்கள் 2 பந்துகளில் 5 விக்கெட்டுகளை இழந்து நியூசிலாந்து கடந்தது.

இந்தத் தோல்விக்குப் பின்னர், இலங்கை அணி ஒட்டுமொத்த புள்ளிப்பட்டியலில் நெதர்லாந்து அணியை மாத்திரம் பின்தள்ளி 9ஆவது இடத்தில் தரப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர்பில் இலங்கை அணி 9 போட்டிகளில் களமிறங்கி இரண்டு போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது.

# கடினமான முடிவு



அவுஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான தலைவராக வலம் வந்த மெக் லானிங் தனது ஓய்வு முடிவை தீடிரென அறிவித்துள்ளார். 31 வயதான அவர், அவுஸ்திரேலிய அணிக்க்காக 182 சர்வதேச போட்டிகளில் தலைவராக செயல்பட்டுள்ளார். 2010ஆம் ஆண்டு தனது 18 வயதில் அவுஸ்திரேலிய அணிக்காக அறிமுகமான மெக் லானிங், 13 ஆண்டு கால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு ஓய்வை அறிவித்துள்ளார்.

2014இல் அவுஸ்திரேலியாவை முதன்முதலில் வழிநடத்திய லானிங், பெண்கள் கிரிக்கெட்டில் வெற்றிகரமான தலைவராக வலம் வருகிறார். 78 ஒருநாள் போட்டிகளில் 69 வெற்றிகள், 100 ரி-20 போட்டிகளில் 76 வெற்றிகள் மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் ஒரு வெற்றி என அவுஸ்திரேயாவை வெற்றிகராமாக வழிநடத்தி உள்ளார்.

மேலும் அவர் தனது தலைமைத்துவத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு நான்கு ரி-20 உலகக்கோப்பைகள், ஒரு 50 ஓவர் உலகக்கோப்பை மற்றும் கடந்த ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று கொடுத்துள்ளார்.

ஓய்வு குறித்து அவர் கூறுகையில், “சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகுவது என்பது கடினமான முடிவு. ஆனால், இப்போதுதான் எனக்கு சரியான நேரம் என்று உணர்கிறேன். 13 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை அனுபவித்த நான் நம்பமுடியாத அதிர்ஷ்டசாலி. அதனால் ஓய்வு பெற இப்போது சரியான நேரம் என்று எனக்குத் தெரியும். என்னால் சாதிக்க முடிந்ததைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

# காஸாவில் சண்டையை நிறுத்த மோடியால் முடியுமா?

## ஈரான் வைத்திருக்கும் நம்பிக்கை என்ன?

பிரியங்கா ஜா

அக்டோபர் 7 ஆம் தேதி, ஹமாஸ் ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் மீது ஏராளமான ராக்கெட்டுகளை ஏவி உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கினர். இதற்கு கண்டனம் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, இது “தீவிரவாத தாக்குதல்” என்று கூறினார்.

அன்றிலிருந்து காஸா பகுதியில் இஸ்ரேலின் குண்டு வீச்சு தொடர்கிறது. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நிலவும் மோதல்களுக்கு மத்தியில், ஈரான் அதிபர் எப்ரஹீம் ரையீஸியும் பிரதமர் நரேந்திர மோடியும் திங்கள்கிழமை தொலைபேசியில் பேசினர்.

இந்த உரையாடலுக்குப் பிறகு, காஸா விவகாரத்தில் ஈரானும் இந்தியாவும் ஒன்றிணைந்து இஸ்ரேலை சமாதானப்படுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்தது.

உரையாடல் குறித்து சமூக ஊடகத்தில் பதிவிட்டி



ருந்த பிரதமர் நரேந்திர மோடி, இந்த மோதலால் ஏற்படும் உயிரிழப்புகள் கவலையளிப்பதாகக் கூறினார்.

ஈரான் வெளியிட்ட அறிக்கையில், மத்திய கிழக்கில் நடந்து வரும் இந்த மோதலைத் தடுக்க இந்தியா தனது முழுத் திறனையும் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் எப்ரஹீம் ரையீஸி கேட்டுக்கொண்டதாகக் கூறியது.

இதற்கு ஒரு நாள் முன்னதாக, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியானிடம் பேசினார்.

பாலத்தீனத்தின் மீதான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ள இந்த தருணத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடந்துள்ளதால், இது முக்கியத்துவம் பெறுகிறது.

எனினும், பாலத்தீனம் தொடர்பான தனது கொள்கையில் மாற்றம் இல்லை என்றும், இரு நாடுகளின் தீர்வை ஆதரிப்பதாகவும் இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது. மோதலுக்கு மத்தியில், பாலத்தீன தலைவர் மஹ்மூத் அப்பாஸுடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி, காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளையும் அனுப்பினார்.

ஆனால், பிரதமர் மோடி மற்றும் எப்ரஹீம் ரையீஸி இடையேயான பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஈரான் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேல் நேரடியாகத் தாக்கப்பட்டதால், இந்தியாவின் நிலைப்பாடு குறித்த விவாதம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

### மோடி- ரையீஸி உரையாடல்: ஈரான் என்ன சொன்னது?

ஈரானின் செய்தி நிறுவனமான ஐஆர்என்ஏ, திங்களன்று நரேந்திர மோடியுடனான தனது உரையாடலின் போது ஈரான் அதிபர் கூறியது பற்றிய தகவல்களை வெளியிட்டிருந்தது.

அதில், போர்நிறுத்தத்திற்கு ஆதரவாக இருப்பதாகவும், காஸா மக்களுக்கு உதவி வழங்குவதில் உலக நாடுகளின் கூட்டு முயற்சி இருக்கிறது என்றும் கூறினார்.

அந்த அறிக்கையின்படி, ‘காஸாவில் வசிப்பவர்களுக்கு எதிரான சியோனிஸ்டுகளின் குற்றங்களைத் தடுக்க இன்று இந்தியா தனது முழுத் திறனையும் பயன்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.” என ரையீஸி கூறியிருந்தார்.

‘பாலத்தீனர்களின் தொடர்ச்சியான கொலைகளால் அனைத்து சுதந்திர நாடுகளும் அமைதியற்ற நிலையில் உள்ளன, மேலும் இந்த கொலைகளின் தாக்கம் பிராந்தியத்திற்கு வெளியேயும் காணப்படும்” என்று ரையீஸி கூறினார்.

ஐஆர்என்ஏ கருத்துப்படி, ரையீஸி இந்தியப் பிரதமருடனான தனது உரையாடலில், ‘சியோனிச அத்துமீறலை எதிர்ப்பதற்கு பாலத்தீன குழுக்களுக்கு முழு உரிமை உண்டு. இந்த ஒடுக்குமுறையிலிருந்து தங்களை விடுவிக்க போராடும் பாலத்தீன மக்களுக்கு அனைத்து நாடுகளும் ஆதரவளிக்க வேண்டுகிறோம்.’ எனக் கூறியுள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமை மோசமடைவதை தடுத்து உடனடியாக அமைதியை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்திய பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த உரையாடலின் போது, காஸாவில் நிலைமை கட்டுக்கடங்காமல் இருப்பதைத் தடுக்கவும், மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளைத் தொடரவும், முழு பிராந்தியத்திலும் உடனடியாக அமைதியை மீட்டெடுக்கவும் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதச் சம்பவங்கள், வன்முறைகள் மற்றும் சாதாரண மக்களின் உயிர் இழப்புகள் குறித்து பிரதமர் கவலை தெரிவித்ததாக அதில் கூறப்பட்டுள்ளது. இஸ்ரேல்-பாலத்தீன விவகாரத்தில் இந்தியாவின் நிலையான மற்றும் நீண்டகால நிலைப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

### இந்தியாவால் போரை நிறுத்த முடியுமா?

ஈரான் ஒரு ஷியா இஸ்லாமிய நாடு. ஈரானுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான ஷியா முஸ்லிம்கள் உள்ளனர். இந்தியா பிரிக்கப்படாமல் இருந்திருந்தால் அதாவது பாகிஸ்தான் உருவாகாமல் இருந்திருந்தால் இந்தியா ஈரானுடன் இருந்திருக்கும்.

மறுபுறம், 2014ல் மோடி தலைமையிலான அரசு பதவிக்கு வந்த பிறகு, இஸ்ரேலும் இந்தியாவும் நெருங்கி வந்தன. பாதுகாப்பு, இணையம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும், பிரதமர் மோடியும் ஒருவரையொருவர் பாராட்டுவது போல் தெரிகிறது.

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு, ஈரான் ஹமாஸை வெளிப்படையாக ஆதரித்தது. அதே சமயம் பாலத்தீனத்தையோ, ஹமாஸையோ குறிப்பிடாமல் இந்தியா “தீவிரவாத தாக்குதல்” என்று கூறியது.

சமீபத்திய நிகழ்வுகளுக்குப் பிறகு கேட்கப்படும் கேள்வி என்னவென்றால், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் சமநிலையில் இருக்க இந்தியா முயற்சிக்கிறதா?

டெல்லியை தளமாகக் கொண்ட திங்க் டேங்க் சென்டர் ஃபார் இந்தியா வெஸ்ட் ஆசியா டயலாக்.யின் இயக்குனர் உமைர் அனஸ், அதனை அப்படி பார்க்கவில்லை.

மாறாக, காசா நெருக்கடி இப்போது எடுத்துக்கொண்டிருக்கும் திசையானது அனைத்து நாடுகளையும் பொறுமை இழக்கச் செய்கிறது என்பதை இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உரையாடல் காட்டுகிறது என்று அவர் கூறுகிறார்.

காஸா மீதான நெருக்கடி தற்போது அனைத்து நாடுகளையும் பொறுமை இழக்கச் செய்வதே இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான இந்த உரையாடல்கள் காட்டுவதாக உமைர் அனஸ் கூறினார்.

“இந்த நேரத்தில், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் சமநிலைப்படுத்துவது ஒரு பெரிய கேள்வி அல்ல. ஆனால் காஸாவில் நடக்கும் நெருக்கடி மிகப்பெரிய



பிரச்னை. அந்தப் பிராந்தியத்தில் இந்தியா பற்றிய ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டுள்ளது. அது, இந்தியா இஸ்ரேலுடன் நிற்கிறது என்பது தான். அரேபிய ஊடகங்களைப் பாருங்கள், இந்தியா பாலத்தீனத்தின் மீதான தனது ஆதரவைவிட்டுவிட்டு, இஸ்ரேலை முழுமையாக ஆதரிப்பதாக அனைத்து இதழ்களிலும் எழுதுகிறார்கள். இதனால் அரபு நாடுகளில் இந்தியாவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இது தான் உண்மை,” என்றார் அவர்.

இந்த பிம்பம், காஸா தொடர்பாக இந்திய பிரதமர் மோதியின் முந்தைய அறிக்கையை வைத்து உருவாக்கப்பட்டது எனக்கூறும், உமைர் அனஸ், “இதனால் அரபு நாடுகளில் இந்தியாவுக்கு நஷ்டம் ஏற்படலாம்” என்றார்.

ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் நெல்சன் மண்டேலா மையத்தில் கற்பிக்கும் உதவிப் பேராசிரியரான பிரேமானந்த் மிஸ்ராவும் இதை சமநிலைப்படுத்தும் செயலாகக் கருதவில்லை.

ஈரான் பக்கம் இருக்க வேண்டுமா அல்லது இஸ்ரேல் பக்கம் இருக்க வேண்டுமா என இந்தியா தேர்ந்தெடுக்கும் அளவுக்கு தற்போதைய சூழ்நிலை இல்லை என அவர் கூறினார்.

“இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நடக்கும் மோதலில் ஈரான் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை குறைத்து மதிப்பிட முடியாது,” என்றார்.

### இந்தியா மீது ஈரானுக்கு ஏன் இவ்வளவு நம்பிக்கை?

டொனால்ட் டிரம்ப் ஆட்சிக் காலத்தில் அணுசக்தி ஒப்பந்தம் எட்டப்படாததால் ஈரான் மீது அமெரிக்கா பல தடைகளை விதித்தது. இதனால், இந்தியா மற்றும் ஈரான் இடையேயான உறவும் பல சவால்களை எதிர்கொண்டது. 2019-ம் ஆண்டு ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்த வேண்டிய நிலை கூட ஏற்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)





# நாடற்றவர்களின் துயரம்!

உலகம் முழுவதும் அகதிகளின் துயரம் பேசப்படும் அளவுக்கு நாடற்றவர்களின் துயரம் பேசப் படுவதில்லை. என்றைக்காவது தாய்நாடு திரும்புவோம் என்கிற நம்பிக்கையாவது அகதிகளுக்கு இருக்கும். ஆனால், எந்த நாட்டின் குடிமக்களாகவும் அங்கீகரிக்கப்படாத நாடற்றவர்கள், தங்களது சொந்த நாட்டிலேயே அகதி கள்போல வாழ்ந்து வருகின்றனர்.

அகதிகளுக்கும், நாடற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? அகதிகள் ஏதாவது ஒரு நாட்டின் குடிமக்களாக இருப்பார்கள். உள்நாட்டுப் போர் உள்ளிட்ட ஏதோ ஒரு காரணத்துக்காக சர்வதேச எல்லையைத் தாண்டியவர்கள். ஆனால், நாடற்றவர்கள் பெரும்பாலும் தாங்கள் பிறந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்பவர்கள் சர்வதேச எல்லையைத் தாண்டாதவர்கள்.

நாடுகளின் குடியுரிமைச் சட்ட விதிகள், பல்வேறு சந்தர்ப்பங்களில் இனம், மதம், மொழியின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவது போன்றவை நாடற்றவர்கள் உருவாவதற்கு முக்கியக் காரணங்களாக உள்ளன் பாலினப் பாகுபாடு மற்றொரு காரணமாகக் கூறப்படுகிறது. சில நாடுகளின் சட்டங்களில், தந்தையின் குடியுரிமை மட்டும்தான் குழந்தைகளுக்குப் பொருந்தும் தாயின் குடியுரிமையை வைத்து குழந்தைகளுக்கு குடியுரிமை அளிக்கப்படுவதில்லை.

ஒருவேளை தந்தை நாடற்றவராக இருந்தாலோ, காணாமல் போனாலோ, இறந்துவிட்டாலோ அவரது குழந்தைகளும் நாடற்றவர்களாகி விடுகின்றனர். புதிய நாடுகளின் தோற்றமும், நாடுகளின் சர்வதேச எல்லைகளில் ஏற்படும் மாற்றமும் அப்பகுதியில் வாழும் மக்களை நாடற்றவர்களாக்கி விடுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்கிறது ஐ.நா. அகதிகள் முகமை.

அகதிகளுக்கான ஐ.நா. முகமை (யுஎன்ஹெச்சிஆர்) அண்மையில் வெளியிட்ட ஆண்டறிக்கையின்படி 95 நாடுகளில் வசிக்கும் 44 லட்சம் பேர் நாடற்றவர்களாக அறியப்பட்டிருக்கின்றனர். பல நாடுகள் தங்கள் நாட்டில் வசிக்கும் நாடற்றவர்கள் குறித்த தரவுகளை வைத்திருக்கவில்லை என்பதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக்கூடும்.

பெரும்பாலும் சிறுபான்மை இனக் குழுக்களைச் சேர்ந்த இவர்கள், அரசியல், பொருளாதார ரீதியாக ஒதுக்கப்பட்டவர்களாகவும், பாகுபாடு, துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும் உள்ளனர்.



எந்த நாட்டின் குடிமக்களாகவும் அங்கீகரிக்கப்படாததால் கல்வி, சட்டப்படியான வேலை, மருத்துவ வசதிகள் போன்ற அடிப்படை உரிமைகள்கூட நாடற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை. வங்கிக் கணக்கு தொடங்கவோ, திருமணம் செய்துகொள்ளவோகூட அவர்களால் முடிவதில்லை.

ஐ.நா. முகமையின் முயற்சியால் 2014-ஆம் ஆண்டு முதல் இதுவரை 5 லட்சம் பேர் தாங்கள் வாழும் நாடுகளிலேயே குடியுரிமை பெற்றுள்ளனர். அந்த வகையில் 2023-ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது. அதன்படி, பல்வேறு நாடுகள் நாடற்றவர்களுக்கு சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளன.

கிர்கிஸ் குடியரசு, மால்டோவா ஆகிய நாடுகள் நாடற்றவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் நாடற்றவர்களாக இருப்பதைத் தடுக்கும் வகையில் சட்டப் பாதுகாப்பை அறிமுகம் செய்துள்ளன. நாடற்றவர்கள் என்ற நிலையை முறைப்படுத்தும் சட்டக் கட்டமைப்புக்கு போர்த்துக்கல் அனுமதி அளித்துள்ளது.

நாடற்றவர்கள் குடியுரிமை பெறவும், பெற்றோர் நாடற்றவர்களாக இருந்தாலும் அவர்களின் குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் அளிக்கவும் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது வடக்கு மெசடோனியா. கென்யா தனது நாட்டில் வசிக்கும் நாடற்ற 'பெம்பா' சமூகத்தைச் சேர்ந்த 7,000 பேருக்கு நிகழாண்டு குடியுரிமை வழங்கியுள்ளது. நாடற்றவர்களாகும் அபாயத்தில் இருந்த 3,000 பேருக்கு குடியுரிமை வழங்கியுள்ளது தான்சானியா.

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் இவ்வாறு 15 வயதுச் சிறுவன் நாடற்ற நிலைக்குத் தள்ளப்படுவதை உயர்நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் தலையிட்டு தடுத்து நிறுத்தியது. 2008-ஆம் ஆண்டு இந்தியாவில் பிறந்த அந்தச் சிறுவனை, தன் மனைவியின் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக சிறுவனின் தந்தை கனடாவிலிருந்து பெங்களூரு வந்தார்.

நாளடைவில் அவரது தொடர்பு விட்டுப்போக, சிறுவனின் தாய், கனடா குடியுரிமை பெறுவதற்காக இந்தியக் குடியுரிமையை 2015-இல் கைவிட்டார். சிறுவனின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) கடந்த மார்ச் மாதம் காலாவதியான நிலையில், கடவுச்சீட்டை புதுப்பிக்க வெளியுறவு அமைச்சகம் மறுப்பு தெரிவித்தது.

சிறுவனும், அவரது தாயும் கர்நாடக உயர்நீதிமன்றத்தை அணுகினர். மனிதாபிமான அடிப்படையில் சிறுவன் வெளிநாட்டுக்குச் சென்று தனது தாயுடன் சேரும் வகையில் அவருக்கு கடவுச்சீட்டைப் புதுப்பிக்கவும், அது சிறுவனின் 18 வயது வரை செல்லத்தக்கதாக இருக்கவும் வெளியுறவு அமைச்சகத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாடுகளுக்கு இடையிலான போரும், உள்நாட்டுப் போரும் அகதிகளை உருவாக்குகின்றன என்றால், நாடுகளின் கொள்கைகளும், சட்டங்களும், சமூகப் புறக்கணிப்பும் நாடற்றவர்களை உருவாக்குகின்றன. உலகம் முழுவதும் இவ்வாறு 44 லட்சம் பேர் வாழ்கிறார்கள். இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

'நாடற்ற தன்மைக்குப் பல காரணங்கள் இருந்தாலும், எளிய சட்டம் இயற்றுதல், கொள்கை மாற்றங்கள் மூலம் இந்த பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்' என்ற ஐ.நா. அகதிகள் முகமை தலைவர் பிலிப் கிராண்டியின் கூற்றை உலக நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திருக்கு (எண்: 528) அதிகாரம்: சுற்றம் தழால்
பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.


அரசன் எல்லோரையும் பொதுவகையாக நோக்காமல், அவரவர் சிறப்புக்கு ஏற்றவாறு நோக்கினால், அதை விரும்பிச் சுற்றமாக வாழ்கின்றவர் பலர் ஆவர்.

(தினமணி)

# தடம் மாறும் அரசியல் தலைமைகளின் மத்தியில் மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்களின் நினைவுகள்!

தமிழ்த்தேசிய அரசியல் தளத்தில் தவிர்க்க முடியாத ஆளுமையாக இருந்த மாமனிதர் சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் அவர்களின் நினைவுக்குரிய நாளாக ஒவ்வொரு நவம்பர் 10ந் திகதியும் கொள்ளப்படுகிறது. மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்களின் அரசியல் பயணமும், அவரது கொள்கைகளும் இன்றைய தலைவர்களுக்கு காலத்தால் அழியாத கலங்கரை விளக்காக விளங்குகின்றன. நேர்மையும், தைரியமும், மக்களின் அபிலாஷைகளை அடைவதற்காக அவர் கொண்டிருந்த இதய பூர்வமான அர்ப்பணிப்பும், எவரையும் மதிக்கும் சுபாவமும், தனது உறுதியான கருத்துக்களை பொது வெளியில் வெளியிடும்போது அவர் பேணும் அரசியல் நாகரிகமும், அரசில் களத்தில் வேறுபடுத்தி இனம் காண்பிக்கும் ஆளுமைமிக்க தலைவராக அவரை மாற்றியிருந்தன.

இந்த சூழலில் அவரோடு இணைந்து தமிழத்தேசிய அரசியல் தளத்தில் பயணித்த மூத்த கட்சி உறுப்பினர்களில், மாவை சேனாதிராசா, குலநாயகம், சம்பந்தன், கனகசபாபதி போன்ற சிலரே, தமிழரசுக்ககட்சியின் நீண்டகால செயற்பாட்டாளர்களாக திகழ்கிறார்கள். ஏனைய மூத்த செயற்பாளர்கள் பலர் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஐக்கியமாகிவிட்டார்கள். இன்றுள்ள பலர் பழைய வீட்டில், புதிய குடியிருப்பாளர்களாக, குடியமர்ந்துள்ளார்கள். இந்த நிலையில் பழைய வீடாகிய தமிழரசுக்கட்சியின் கொள்கை கோட்பாடுகளில் பல்வேறு தளம்பல்கள் ஏற்பட்டுள்ளன. கட்சி என்பது, தான் சார்ந்த மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். ஆனால் அவை தடம்மாறி, பதவிகளைப் பெறுவதற்கான ஒரு கட்டுமரமாகவே இக்கட்சி பயன்படுத்தப்படுகிறது. இக்கட்சியின் கொள்கைகளுக்காக பல்வேறு பொதுமக்கள், தலைவர்கள் தமது உயிரை ஆகுதியாக கொடுத்தார்கள். பல்வேறுபட்டவர்களின் தியாகத்தால் உருவாக்கப்பட்ட, இந்தக் கட்சி இன்று வழிமாறிப் பயணிக்கிறது.



இந்நிலையில் மாமனிதர் இரவிராஜ் அவர்களின் வாழ்வியல் பற்றிய மீள்பார்வை அவசியமாகிறது.

ஒரு இளம் துடிப்புள்ள பாராளுமன்ற உறுப்பினராக தனக்கு வாக்களித்த மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்டு இன ஒற்றுமையை மனதில் கொண்டு போராடிய ஒரு தலைவரே மாமனிதர் ரவிராஜ். தனது மக்களின் விடிவிற்காக தனது உயிரையே கொடுக்க தயாராக இருந்த ஒரு தலைவர். தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் மாமனிதர் ரவிராஜ் அவர்களின் அரசியல் பயணத்திலிருந்து இருந்து பெற வேண்டிய பெறுமதியான படிப்பினைகளை உள்வாங்குவதில் தவறிவிட்டார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழர் எதிர்காலத்திலும் அவர்கள் அபிலாஷையிலும் அக்கறை கொண்ட ஒரு தலைவனாக இதய சுத்தியுடைய ஒரு அரசியல் ஆளுமையாக புடமிடப்பட்டிருந்த மாமனிதர் ரவிராஜ் அவர்களின் வாழ்க்கையிலிருந்து, தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது.

மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ எந்த தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரிடமோ, அதன் தலைவரிடமோ நாம் எதிர்பார்க்கமுடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆயினும் மக்களின் நலன் சார்ந்தும் தமிழ் மக்களின் ஒற்றுமை சார்ந்தும் அவர்கள் செயற்பட வேண்டும். சரியான ஓர் தலைமை தெரிவு செய்யப்படாத பட்சத்தில் தமிழரசுக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடையும். பாராளுமன்ற ஆசனத்தை பெறுவதற்காக மீண்டும் ஒரு தடவை தேர்தல் முறைகேடுகள் வரை பயணப்பட வேண்டியிருக்கும்.

-கொல்லங்கலட்டியான் -

# காஸாவில் சண்டையை நிறுத்த மோடியால் முடியுமா?...

ஈரானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் ஒருபோதும் மோசமாக இருந்ததில்லை, ஆனால் ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளால், அவர்களின் உறவுகள் ஏற்ற தாழ்வுகளை சந்தித்துள்ளது.

2021ஆம் ஆண்டு ஈரான் அதிபர் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெஹ்ரான் சென்றார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள கசப்பை குறைக்கும் முயற்சியாக இது பார்க்கப்பட்டது. அதே ஆண்டில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஈரானுக்கு சென்று வந்தார்.

பொருளாதாரம், அரசியல் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான அறிகுறியாக இது கருதப்பட்டது.

இந்தியாவுக்கான ஈரான் தூதர் இராஜ் எலாஹியும் ஒரு சேனலுக்கு அளித்த பேட்டியில் , போர் நிறுத்தத்தை எட்டுவதில் இந்தியா ஆக்கப்பூர்வமான பங்கை வகிக்க முடியும் என்று கூறினார்.

இப்படிப்பட்ட நிலையில், இந்தியாவிடம் ஈரான் ஏன் இவ்வளவு எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறது என்பதுதான் கேள்வி. இதற்கு ஈரானின் சொந்த நலன்களே மிகப் பெரிய காரணம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

இதுகுறித்து உமைர் அனஸ் கூறுகையில், ‘இந்த பெரிய மோதலில் ஈரான் பங்கேற்க விரும்பவில்லை. ஆனால், ஈரான் மீதும் அதிக அழுத்தம் உள்ளது. லெபனானில் இருந்து ஹெஸ்பொலா மீதும் அழுத்தம் உள்ளது. காஸா மக்கள் கொல்லப்படுகிறார்கள், நீங்கள் எப்போது நடவடிக்கை எடுப்பீர்கள்? என ஈரான் ஆதரவுக்குழுக்கள் கேட்கிறார்கள். ஈரானுக்கு ஆதரவான அனைத்து ஆயுதக் குழுக்களும் தொடர்ந்து ஈரானிடம் இந்த மோதலில் நுழைய எப்போது அனுமதிப்பீர்கள் என்று கேட்கிறார்கள்,” என்றார்.

அதேசமயம், உலக அரசியலில் இந்தியா ஒரு ஆதிக்க சக்தியாக இருக்காது என ஈரானுக்கு நிச்சயமாகத் தெரியும், ஆனால் அது இஸ்ரேல், பாலத்தீனம் மற்றும் அரபு நாடுகளுடன் நல்லுறவைக் கொண்டுள்ள, அமெரிக்காவுடன் நல்லுறவைக் கொண்ட ஒரு முக்கியமான சக்தி என்றும் பிரேமானந்த் மிஸ்ரா கூறுகிறார்.

உலக அரசியலில் இந்தியா ஒரு ஆதிக்க சக்தியாக இல்லை என ஈரானுக்குத் தெரிந்தாலும், இஸ்ரேல், பாலத்தீனம், அரபு நாடுகள் மற்றும் அமெரிக்காவுடன் நல்லுறவைக் கொண்டுள்ளதால், இந்தியா ஒரு முக்கியமான சக்தியாக இருக்கிறது என பிரேமானந்த் மிஸ்ரா கருதுகிறார். அதே சமயம், கடந்த 40 ஆண்டுகளாக சன்னி அரே பியர்கள், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் நல்லுற வைக் கொண்டிருக்கவில்லை என்பதும் ஈரானுக்குத் தெரியும், என்றார் பிரேமானந்த்.



### இந்தியாவால் என்ன செய்ய முடியும்?

கடந்த ஆண்டு யுக்ரேனை ரஷ்யா தாக்கியபோது, இந்தப் போரை நிறுத்துவதில் இந்தியா மத்தியஸ்தராக செயல்பட முடியுமா என்ற கேள்வி எழுந்தது.

அந்த நேரத்திலும் இந்தியா எந்த அணியிலும் சேராமல் இருந்தது. தற்போது, அதே கேள்வி மீண்டும் ஒரு முறை தற்போது எழுகிறது. ஆனால், இம்முறை அது இஸ்ரேல், பாலத்தீனம் மற்றும் ஈரான் ஆகிய தரப்புகளுடன் நல்லுறவைக் கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது.

பிரதமர் இரண்டு விஷயங்களை மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளதாக உமைர் அனஸ் கூறுகிறார்.

“முதலாவதாக, அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுவினர் நடத்திய தாக்குதல் ஒரு பயங்கரவாத சம்பவம், இது நடந்திருக்கக்கூடாது. இந்தியாவின் வலுவான ராஜதந்திரத்திற்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்று அவர் கூறுகிறார். மறுபுறம், பாலத்தீனத்தில் பாதிக்கப்படும் பொதுமக்கள் குறித்து இந்தியாவும் கவலைப்படுவதாகவும் பிரதமர் பேசுகிறார். இது இந்தியாவின் வலுவான ராஜதந்திரத்தின் அடையாளம்.”

ஆனால், இஸ்ரேலுக்கும் பாலத்தீனத்துக்கும் இடையேயான சர்ச்சையைத் தீர்க்கும் அளவுக்கு, சர்வதேச அரங்கில் இந்தியா தன்னை ஒரு பெரிய சக்தியாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறதா என்றால், பெரும்பாலான நிபுணர்கள் இல்லை என்றே கூறுகின்றனர்.

